உ





அமரர்

# இராசேஸ்வரன் பொன்மலர்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# " பொன் தீபம் "

19.09.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இதனை இதனல் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல் "

– திருவள்ளுவர்

# வளமான வாழ்விற்கு



தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்,
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்குப் போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.

"நன்னெறியே இறைவணக்கம்"

– சுவாமி விவேகானந்தர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

# திருமதி. இராசேஸ்வரன் பொன்மலர்

அவர்களின்

**நீங்காத நினைவுகளைத் தாங்கி வரும்**

# பொன் தீபம்

# 19.09.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புக் குலதெய்வத்திற்கு

# சமர்ப்பணம்

அணையா விளக்காக வீற்றிருக்கும்

அவர் ஏணியாகவும், மெழுகுவர்த்தியாகவும் இருந்து

பொதுவாகத் தன்னைச் சார்ந்தோரின்

உயர்கல்விக்கும், விடிவிற்கும் சிறப்பாகத் தனது தம்பிமார்கள்

பெற்ற உயர் பதவிகளுக்கும் பொருத்தமான கல்விக்கும் உறுதுணையான

எங்கள் குடும்ப விளக்கு வையத்துள் வாழ்வாங்கு

வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் இணைந்து கொண்ட

**அமரர் பொன்மலர் இராசேஸ்வரன்**

அவர்களின் பாதகமலத்தில் **"பொன் தீபம்"**

என்ற இந்நினைவு மலரைச் சமர்ப்பித்துப் பணிகின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**சகோதர சகோதரிகள் குடும்பமும்,**
**மருமக்கள், பெறாமக்கள்,**
**பேரப்பிள்ளைகளும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "



அன்னை மடியில்
03-05-1943

ஆண்டவன் அடியில்
16-08-2015

அமரர்

# திருமதி.இராசேஸ்வரன் பொன்மலர்

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன்மதசேர் ஆடிநற் திங்களதில்
பூண்ட துதியைநற் பூர்வத்தே- தூண்டுபுகழ்
பொன்மலர் தவமிக்காள் பூதவுடலை தான்நீத்து
மன்னனடி சேர்ந்தாள் மகிழ்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

**தோத்திரப்பாடல்கள்** 3-8

**பகுதி - 1**

வாழ்க்கைத் தடம் 9-6

**பகுதி - 2**

புகழஞ்சலியுரைகள்

**பகுதி 3**

**சமய குருமார்கள்**

1. சிவஸ்ரீ பா. பாலகுமாரக்குருக்கள்
   மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான பிரதம குரு 17
2. சி. ஜெயானந்த சர்மா
   பிரதம பூசகர், மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம் 18
3. Message from the VicarGenreral
   Rev.Dr. Justin B. GnanaPragasam 19

**02. நண்பர்கள்**

1. பிராத்தனையுரை
   திரு. ஆறுதிருமுருகன்
   தலைவர் – துர்க்கா வேதஸ்தானம், தெல்லிப்பளைள 20-21
2. திரு. சிவா. நம்பியாரூரன்
   குடும்ப நண்பர், கனடா 22-23
3. பேராசிரியர் வி. ப. சிவநாதன்
   பொருளியல்துறை – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
   தலைவர் – அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 24-25
4. திரு. இராசநாயகம்
   தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
   முன்னாள் அரச அதிபர் – கிளிநொச்சி 26
5. வை. இரகுநாத முதலியார்
   நம்பிக்கைப் பொறுப்பாளர்
   நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம் 27-34
6. திருமதி. வேலுப்பிள்ளை
   ஓய்வு நிலை அதிபர் விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம் 35-39
7. திருமதி. சரோஜா சிவச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர், மகளிர் அபிவிருத்தி நிலையம் 40-41
8. S. Pradeepan, USA

பகுதி 4 42
உறவினர்கள்
1. Pasumpon Mani (Malasiya) 43
2. Dr. (Mrs) Thas (U.K)
பெண்ணின் பெருமையைப் போற்றப் பாடுபட்டவர் 44
3. Mr. K. Neelakandan
பெண்குலத்தின் பெருமை 45-50
4. செ. சிவப்பிரகாசம் குடும்பம் 51-52
5. Prediction on Ponmalar acca
Vratharajah Ramanan (U.K) 53-54
6. Mrs. Bahiathy Jereshuran Raseswaran

பகுதி 5 55-56
குடும்பத்தினர்
1. Our Beloved Acca
Thamby Ramar 57-65
2. Memorier of our Ponmalar
Mr. C.Canagarajar (USA) 66
3. சாய்ந்து போனதே சந்தன மரம்
திருமதி மகாராணி யோகலிங்கம் (கனடா) 67
4. In Loving memory of our Periyamma
Anusha, Kanitha and Krishna (USA) 68-69
5. The Pillar of Our family
Nilani (Sydrey, Australia) 70
6. Periyamani we miss you!
Kalani (columbo) 71-72
7. Periamami - A woman of substance
Sanju (UK) 73-74
8. Our Periyamami
archana (Sinthu) Canada 75
9. To my dearest Periya mami
Anenthan Alagarajah (Raji) Canada 76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. God saw you getting tired
grandson utheshan (UK) 77-78

**பகுதி 06**

பொன்மலருக்குப் பொருத்தமான ஆக்கங்கள்

1. யாழ் குடாநாட்டில் முன்பள்ளிகளின் வளர்ச்சியில்
பெண்களின் பங்களிப்பு
நன்றி – சிவத்தமிழ்ச் செல்வி வாசகர் 79-97

2. முன்னோர் உருவாக்கிய ஓர் அழியாச் சொத்து
நன்றி – வின்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
125 ஆவது ஆண்டு மலர் 98-102

3. வரலாறு ஓர் எடுத்துக்காட்டு
நன்றி – விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
125 ஆதுவ ஆண்டு மலர் (கடா வெளியீடு) 103-107

**பகுதி 7**

1. சமூக குடும்ப வாழ்க்கை ஒளியில் 108-113

**பகுதி 8**

1. மின்அஞ்சல் மூல அனுதாபச் செய்தி 114

2. துண்டுப் பிரசுர அஞ்சலி 115-120
நன்றி நவிலல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அபிராமி அந்தாதி



மனிதருந் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும் படைத்த
புனிதரும் நீயுமென் புத்தியெந் நாளும் பொருந்துகவே.

நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்றும் அரும் பொருளேயரு ளேயுமை யேயிமையத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்கள் திருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்தரலங்காரம்



தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படைவானவ னேமற வேனுனை நான்
ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

மைவருங் கண்டத்தர் மைந்தகந்த் தாவென்று வாழ்த்து மிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் அடைக்கலமே!

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக் கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# துவாளி விநாயகர் அகவல்



செந்தமிழ் சைவஞ் செழித்திடு துவாளி
யந்தல மேவரு ளானை மாமுக!
கயலினம் பாய்ந்து களித்திடு வெள்ள
வயலரு கதனில் மன்னுபொற் கோவிலாய்!
ஆரணப் பொருளே யானவோங் காரமாம்
பூரணப் பொருளாய்ப் பொலியருண் முதல்வா!
இளம்பிறை வேணி யிறைதான் தாதைதேர்
தளம்பவறு கொடித்த சயத்திறற்றீரா!
பூவிரி சோலை புதுவறப் பொலிவுறக்
காவிரிப் பெருக்கினைக் காட்டிய வையா!
மாயவன் பெற்ற வன்சாப மற்று
மாயவன் றருளிய வாரண முதல்வா!
மன்னு துணையாய் மற்றா ரெனக்குன்
பொன்னடி பற்றினேன் புரந்தருள் செய்வையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி – 01

**திருமதி. பொன்மலர் இராசேஸ்வரன்**
**அவர்களின் வாழ்க்கைத் தடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்

# திருமதி. பொன்மலர் இராசேஸ்வரன்

அவர்களின்

# வாழ்க்கைத் தடம்

நெருகல் உளஎனாருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் அரிது அரிது காண் என்று தாயுமான சுவாமிகள் கூறிய அருள்மொழிகள் எம் பிறவியின் உயர்வை உணர்த்துகின்றன. இப் பிறவியின் பயனை ஒருவர் பெற்றாரா என்பது அவர் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கையினாலும் அவர் விட்டுச் சென்ற நல்லறங்களாலும் புலனாகும். இத்தகைய எடுத்துக்காட்டாக விளங்கியவரே அமரர் பொன்மலர் இராசேஸ்வரன் அவர்கள்.

சீனற்றை சங்கரர் சீமைக்கு உயர்ந்தவரான சீனிவாசக உடையார் மகன் சங்கரப்பிள்ளை பரம்பரையைச் சேர்ந்தவரும் மூளாயிலே பிரசித்த நொத்தாரிசாகவிருந்து "பெரிய சட்டம் பியார்" என்று யாவராலும் அழைக்கப்பட்டுப் பெறற் கருங் கீர்த்தி பெற்ற குணமலையாகிய ஸ்ரீமான் அம்பலவாண பிள்ளையவர்களின் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீமான் இராமசுவாமிப்பிள்ளைக்கும், மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலயத்தை ஸ்தாபித்தவரான ஸ்ரீமான் சின்னப்பு நிற்சிங்க முதலியாரின் மருமகள் பொன்னாச்சிப்பிள்ளைக்கும் சிரேஷ்ட புத்திரனாகத் தோன்றிய அண்ணல் தம்பையா அவர்கள் உயர்தவ வன்னிய உழுவித்துண்ணும் வேளான் குலத்திலகராகிய நவிண்டில் ஸ்ரீமான் க. பொன்னையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சிரேஷ்ட புத்திரியாக அவதரித்த சிவபாக்கியவள்ளி நாச்சன் அவர்களைத் திருமணம் செய்து இல்வாழ்க்கையில் கனிந்த முத்துக்களில் மூத்தவராக பொன்மலர் **1943**ஆம் ஆண்டு வைகாசி மாதம் **03**ஆம் திகதி பிறந்தார்.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்கத் தொடங்கிய பொன்மலர் இடைநிலைக் கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தொடர்ந்தபோதும் சிறிய தந்தையாரான வைத்திய கலாநிதி இ. நிற்சிங்கம் அவர்களின் வேண்டுகோளிற்கமைய தம்பியார் இராமச்சந்திரனுடன் கொழும்பு சென்று கொழும்பு மகளிர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்த போது பூப்பெய்தியதன் காரணமாக மீண்டும் ஊருக்கு வந்து இராமநாதன் கல்லூரியில் சேர்ந்து க.பொ.த (சாதாரணம்) கலைப்பாடங்களைக் கற்றுத் தேறியபின் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் சேர்த்து க.பொ.த (சாதாரணம்) விஞ்ஞான பாடங்களைக் கற்றுக்கொண்டிருந்த வேளையில் தாயாரின் உறவினரான தாமோதரம்பிள்ளை இராசேஸ்வரன் அவர்களைத் தாய் தந்தையரின் விருப்பத்திற்கமைய திருமணம் செய்தார்.

இராசேஸ்வரன் செய்துள்ள பூர்வபுண்ணியம் காரணமாக பொன்மலர் என்னும் மங்கை நல்லாள் அவரது வாழ்க்கைத் துணைவியாக அமைந்து அவருக்குப் பெருமை சேர்த்தார். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பதற்கேற்ப இருவரும் ஆதர்ஷ தம்பதிகளாக வாழ்ந்தார்கள்.

திருமணத்தின் பின்னர் புதுமணத் தம்பதிகள் மகாவலி கங்கை ஆற்றின் கரையில் அமைந்திருந்த வட்டப்புலுவ வீட்டு மனைத்திட்டத்தில் கட்டப்பட்ட வீட்டில் வசித்தார்கள். பின்னர் கண்டி ஹற்றன் நஷனல் வங்கியில் முகாமையாளராகக் கடமை ஆற்றிய இவர்களது உறவினர் சங்கரகுமாரன் என்பவரது வம்சாவழி வீட்டில் வசிக்க வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இயற்கை எழில் கொஞ்சும் வசந்த நகரமான கண்டிமா நகரில் தங்களது தேன்நிலவு வாழ்க்கையைக் களித்து மகிழ்ந்தபின் கணவர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை மேற்கொண்டு **15.02.1973** முதல் **21.07.1976** வரை அங்கு கடமையாற்றினார். பின்னர் இரு ஆண்டுகள் *(**22.07.1976** முதல் **31.07.1978** வரை)* நெல்லியடி புதிய அமெச்சூர் அக்கடமியில் பணி ஆற்றினார். இவரது கணவருக்கு வெளிநாடு சென்று ஆசிரியர் பணி புரியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. தென் ஆபிரிக்காவில் உள்ள இலெசெத்தோ நாட்டில் MOHALEYS HOCK SECONDARY SCHOOLஇல் **01.10.1978** முதல் **31.01.1980** வரை அங்கு பணி ஆற்றிய கணவர்,பின்னர் நான்கு ஆண்டுகள் நைஜீரிய நாட்டின் KADUNA மாநிலத்தில் உள்ள DAURA GOVERNMENT SECONDARY SCHOOL இல் **04.02.1980** முதல் **31.12.1984** வரை ஆசிரியப் பணியைச் சிறப்பாக ஆற்றியபின் இலங்கை திரும்பினார்கள்.

தென் ஆபிரிக்க நாடான இலெசத்தோ மற்றும் நைஜீரியா நாடுகளில் பெற்ற அனுபவங்கள் இருவரையுமே புடம் போட்டு அவர்களுக்குள்ளே பொதிந்து இருந்த திறமைகளையும் தேடல்களையும் வெளிப்படுத்த உதவின. ஆசார குடும்பத்தில் பிறந்த இருவருமே தங்களது பன்முகப் பார்வைகளை வெளிக் கொணர்ந்தனர். ஆணாதிக்கம் பெண்ணாதிக்கம் என்ற நிலைகளைத் தாண்டி இருவரும் ஈருடல் ஒருயிராய் அர்த்தநாரீசுவர வடிவில் வாழ்ந்து தொண்டுகள் செய்தார்கள். இருவரின் எண்ணங்களும் சமுதாயத்தை மேனிலை அடையச் செய்ய வேண்டும் என்ற ரீதியில் அமைந்ததால் அங்கு கருத்து வேறுபாடுகளுக்கு இடம் இருக்க வில்லை. இராசேஸ்வரன் பெண்ணியத்தைக் கண்ணியத் துடன் கண் ஒற்றி வாழ்ந்து மற்றவர்கட்கு ஒரு முன்மாதிரியாக இருந்தார். கைப்பிடித்த காதல் மனைவி தன் தகப்பனார்போல் மக்கள் சேவையே மகேசன் சேவை என்று துணிந்து புறப்பட்டபோது இராசேஸ்வரன் வீட்டுப் பொறுப்பை விரும்பி ஏற்றுத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவிக்கு அனுசரணையாக மனைவி பங்குபற்றிகொண்டு வரும் திட்டங்களை அமுலாக்க உரியவர்களுடன் கடிதத் தொடர்புகளை ஏற்படுத்திப் பின்னர் அவற்றை எல்லாம் கோவைப்படுத்தித் தன் வீட்டிலேயே ஓர் பணிமனையைச் சிறப்பாகத் தனிஆளாக நிர்வகித்தார்.

இராசேஸ்வரன் நைஜீரியா நாட்டின் வடபகுதி, சகாராப் பாலைவனத்தின் எல்லைப் பிரதேசமாக அமைந்த கடுணா மாநிலத்தின் DAURA நகரில் உள்ள அரசினர் இடைநிலைப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் போது, மனைவி பொன்மலர் தமது சமூக சேவையை முதன்முதல் அங்கு ஆரம்பித்தார்கள். பாடசாலைச் சமூகத்தில் வசித்த வெளிநாட்டு ஆசிரியர்களின் பிள்ளைகளையும் மற்றும் உள்ளூர்வாசிகள் சிலரின் பிள்ளைகளையும் ஒருங்கிணைத்து ஓர் சிறுவர் பாடசாலையை ஆரம்பித்துத் திறம்பட நடாத்தி னார்கள். அன்னாருடைய சேவையை அவ்வூர் நகரபிதா (மாநகர சபை முதல்வர்) வியந்து பாராட்டியுள்ளார்கள். இலங்கை திரும்பிய பின்னர் கொழும்பின் புறநகர் கல்கிசையில் அமைந்திருந்த WOODLAND NURSARY TRAINING SCHOOL இல் சேர்ந்து கற்றுத் தகுதிவாய்ந்த நேர்சரி ஆசிரியையாக வெளிவந்தார். அதன் பின்னர் இவரின் தாகமான நேர்சரி பள்ளி ஆரம்பித்து நடாத்த வேண்டும் என்ற எண்ணக்கரு உருப்பெற ஆரம்பித்தது. மூளாய் வந்ததும் MODEL NURSARY SCHOOL ஒன்றை ஆரம்பித்து அங்கு முன் பள்ளிகளில் திறமையாகக் கற்பிக்கும் ஆசிரியைகளை உருவாக்கினார்.

இவரின் இத்தகைய பணிகட்கு மூளாய் மாதர் சங்கம், மூளாய் ஐக்கிய நாணய சங்கம், Lions Club போன்ற ஸ்தாபனங்கள் உதவிக் கரங்கள் நீட்டின. தகப்பனார் தபாலதிபர் தம்பையாவின் இரத்தத்தில் ஊறியிருந்த சேவை மனப்பான்மை மகள் பொன் மலரிடம் துளிர் விட்டு வளர ஆரம்பித்தது. நாம் எதை உள்ளன் போடு விரும்புகின்றோமோ அதுவே நம்மைச் செதுக்கிச் சீராக்கி உலகில் புகழுடன் வலம் வரும் உந்துசக்தியாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு குழப்பங்களால் நலிவுற்று, செய்வது அறியாது திகைத்து இருந்த நேரம் பல வெளிநாட்டு, உள்நாட்டுத் தொண்டு நிறுவனங்கள் மக்களுக்குச் சேவை ஆற்ற முன் வந்தன. அரச சார்பற்ற இத்தொண்டு நிறுவனங்கள் துணிந்து துடிப்புடன் திறமையாகச் செயலாற்றும் தொண்டர்களைத் தேடினார்கள். இத் தொண்டு நிறுவனங்களின் தொலை நோக்குகளை நிறைவு செய்யும் பணியில் பொன்மலர் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்தார்கள். நேரம், காலம், இன்ன இடம் என்று பாராமல் கூட்டங்களில் பங்குபற்றி, கருத்தரங்குகளில் துணிந்து தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்து நிறைந்த அனுபவங்களைப் பெற்றுப் பத்திரிகைகளே பாராட்டிப் பேட்டி எடுக்கும் அளவிற்கு உயர்ந்து நின்றார்கள்.

பொன்மலர் பங்கு பற்றிய தனது சேவைகளை ஆற்றிய வெளிநாட்டு உள்நாட்டு நிறுவனங்களில் ஒரு சில:

1. G.T.Z - J.R.P. (GERMAN TECHNICAL COOPERATION - JAFFNA REHABILITATION - PEOJECT)
2. UNICEF (UNITED NATIONS INTERNATIONAL CHILDRENS' EDUCATION FUND)
3. ICRC ( INTERNATIONAL COMMITTEE OF RED CROSS)
4. ASIAN DEVELOPMENT BANK (DIFFERENT PROJECTS)
5. EUROPEAN UNION ( DIFFERENT PROJECTS)
6. NECDEP
7. NECORD
8. FORUT
9. JAFFNA CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF JAFFNA
10. NATIONAL WATER SUPPLY AND DRAINAGE BOARD
11. ENVIRONMENAL AUTHORITY
12. சர்வோதயம்
13. இந்து மாமன்றம் - யாழ்ப்பாணம் கிளை
14. இந்து சமயப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கு உயிர் ஊட்டத் தனது மூளையில் INS - GD (INSTITUTE OF NURSARY STUDIES AND GENDER DEVELOPMENT) - சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் என்ற ஸ்தாபனத்தை இருவருமாக உருவாக்கி அதன் இரு தூண்களாக விளங்கினார்கள்.

கிராம தன்னிறைவு, கிராம ஏழை எளிய மக்களின் பொருளாதார வளர்ச்சி, மண்வளம்பேணல், சூழல் மாசுபடுத்தலைத் தடுத்தல், சூழல் விழிப்புணர்ச்சி, பயன்தரு மரங்களை வளர்த்தல், இயற்கையாகப் பெருமளவில் கிடைக்கும் உண்ணக் கூடிய பொருட்களில் இருந்து சத்துமா மற்றும் உண்ணும் பொருட்களைத் தயாரித்தல் / அவற்றை விற்பனை செய்தல் போன்ற பலபல செயற்றிட்டங்கள் இவர்களது நிறுவனமான சங்கமத்தின் பெரு நோக்கங்களாகும்.

வேலை இல்லாது இருந்த எத்தனையோ பெண்களுக்குத் தைக்கக் கற்றுக் கொடுத்து அவர்களது வருமானத்துக்கு வழி செய்துள்ளார்கள். இருவருமே வெளிச்சம் போட்டுப் பிரபலப்படுத்தாத மனித நேய சேவையை கிராமத்து ஏழை மக்கள் பெற்று முன்னேற்றம் காணும் வண்ணம் செய்து வந்துள்ளனர்.

ஜேர்மன் தொழில்நுட்ப ஒழுங்கிணைப்பின் ஒரு திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்து இருவரையுமே மிகவும் கவர்ந்தது. இந் நிறுவனம் நாட்டில் நல்லாட்சி மலர வேண்டும் என்ற கருத்தை மக்களிடையே விதைத்தது. இராசேஸ்வரன் பொன்மலர் ஆதர்ஷ தம்பதிகள் இவ்வகை நல்லாட்சி வீட்டிலும் நடைபெற்றால் தான் தங்கள் குடி உயரும். தாங்கள் மேற்கொள்ளும் பணிகளைச் சீரும் சிறப்புமாக நிறைவேற்ற முடியும். உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்குத் தாங்கள் ஒரு முன் உதாரணமாகத் திகழ முடியும் என்பதை வாயால் சொல்லாது செயலால் காண்பித்து வாழ்ந்தார்கள். நல்லாட்சி நடைபெறாக் குடும்பங்கள் எத்தனை பெரிய இழப்புக்களைச் சந்திக்கின்றன.

இராசேஸ்வரனின் முன்னோர்கள் வட கருணையம் பதியில் அமைந்துள்ள பல ஆலயங்களை ஸ்தாபித்தனர். முகாமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகப் பரிபாலித்தனர். இவற்றுள் சிறப்பானவை துவாளி வீரகத்திப் பிள்ளையார், துவாளி கண்ணகை அம்மன், இமையாணன் நாச்சிமார், குலனைப் பிள்ளையார், பெரியபுலத்து முதலியம்பாள், சிவபாதசுந்தரப் பெருமகனார். அன்று வசித்த பொலிகண்டி (கந்தவனக் கடவை) முருகன் கோவில் எனப் பலவாம். பிறந்த ஊர் விட்டுப் புகுந்த ஊரான மூளாய் வந்ததும் தனது மாமனார் தம்பையாவால் பராமரிக்கப்பட்டுப் பின் அவரது மூத்த மகளும் இவரது மனைவியுமான பொன்மலரால் நிருவகிக்கப்படும் மூளாய் வதிரன்புலோ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தைச் செவ்வனே பூசைகள் நடைபெற உதவினார். பூர்வ புண்ணியம் காரணமாக ஆலய பரிபாலனம் இருவரிடமும் இறைவனால் கொடுக்கப் பட்டது.

சிதம்பரம் ஆலயத்தின் முன்றலில் ஒலிக்கும் மணி இவர்களது முன்னோரால் செய்விக்கப்பட்டு வழங்கப்பட்டது. இச் செய்தி இன்றும் இங்கு முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது. நோய்களால் பாதிக்கப்பட்டாலும் இராசேஸ்வரன் பழைய நினைவுகளுடன் ஒதுங்கி, முதுமை எய்தி வாழாமல் மனித நேயத்திட்டங்களுடன் போராடி மனைவி உற்சாகமூட்டக் கடைசிவரை இளமைத்துடிப்புடன் வாழ்ந்தார்.

பொன்மலரின் தகப்பனார் செயற்பாட்டுத் திறனை இழந்துகொண்டிருந்த மூளாய்க் கூட்டுறவு வைத்தியசாலையை ஏனையோரின் உதவியுடன் எப்படி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தாரோ அதேபோல் இராசேஸ்வரன் பொன்மலர் தம்பதிகள் சேர்ந்தே இக் கூட்டுறவு வைத்தியசாலையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்கள்.

வெற்றியின் முதல் இரகசியம் தன்னம்பிக்கை. இதுவே இருவரினதும் இலட்சியம். குறிக்கோள் எல்லாமே. வெற்றிகரமான மனிதனின் நற்பெயருக்கு இழப்பு என்றும் இருந்தது இல்லை. இவர்கள் ஆற்றிய நற்பணிகள் என்றும் மக்கள் மனதில் சிரஞ்சீவியாகச் சந்ததி சந்ததியாக நிலைத்திருக்கும். மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சாதனைக்கும் பின்னால் ஒரு துடிப்பான பாசமுள்ள மனைவியோ அல்லது அன்புடன் அரவணைத்து உற்சாகம் கொடுக்கும் கணவரோ இருப்பார்கள் என்பதற்கு இராசேஸ்வரன் பொன்மலர் தம்பதிகள் உதாரணமாக உள்ளார்கள்.

"சொர்க்கம் கிடைக்காத குறையை ஈடுசெய்யக் கிடைத்த பரிசு, அன்பு மனைவி" 'நல்ல கணவனை உருவாக்கும் மனைவி ஒரு மேதை' என்பர். தன் மனைவியைப் புடம்போட்டு ஜொலிக்க வைக்க ஒரு தீர்க்கதரிச கணவனால் மாத்திரமே முடியும்.

நீ இறக்கும் போது கடவுள் உனக்குக் கடன்பட்டவனாக இருக்கும்படி நீ வாழ வேண்டும். இது ஆன்றோர் முதுமொழி. இராசேஸ்வரன் பொன்மலர் தம்பதிகள் இவ்வாறு வாழ்ந்தார்கள் என்று துணிந்து கூறலாம்.

இத்தனை காலமும் வள்ளுவனும் வாசுகியும்போல இணை பிரியாது நகமும் சதையும்போல் ஒன்றிணைந்து அளப்பரிய சேவைகளை ஆற்றிய இராசேஸ்வரன் பொன்மலர் தம்பதிகளின் வாழ்க்கை அனுபவங்களை ஞாபகங்களில் வளர்த்து அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி இளஞ்சந்ததியாரும் எதிர்காலச் சிறாரும் ஓரளவுக் காவது பின்பற்றி வாழ முயற்சித்தால் அதுவே இராசேஸ்வரன் தம்பதிகளின் ஆத்ம சாந்திக்கு உய்தி அளிக்கும். இறைவன் அவர்களை ஏதோ ஒரு பணியை நிறைவேற்ற இப் பூவுலகுக்கு அனுப்பியிருந்தார். அப்பணி நிறைவடைந்ததும் அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டார் என்றே நாம் எங்கள் மனத்தைத் தேற்றிக்கொள்ள வேண்டும். ஈடுசெய்ய முடியாத இழப்பு இது.

அவரது இழப்பின் வலியை உணர்கின்ற குடும்பத்தினர் "வேரென நீயிருந்தாய் அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம்" என்ற பாடல் வரிகளின் கருத்தாழத்தை எண்ணிப்பார்த்து ஏக்க மடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி – 02

புகழஞ்சலியுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான முகாமையாளர் இராஜேஸ்வரன் பொன்மலர் அம்மா அவர்களின் சிவப்பேறு குறித்த இரங்கலுரை

மூளாய் முத்துக்குமார சுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த இராசேஸ்வரன் பொன்மலர் அம்மா அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மிகவும் மனம் வருந்துகிறேன்.

அவர் ஆலயத்தின் முகாமையாளராக மட்டுமன்றி சாதாரண தொண்டராகவும் பணிபுரிந்து ஆலய வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணித்த சிறந்த சமூக சேவகியாக விளங்கினார்.

ஆலய கும்பாபிஷேக காலத்திலும் மஹோற்சவகாலங்களிலும் முழுப்பணியையும் பொறுப்பேற்று நடாத்தி நிறைவேற்றி ஆண்டவனருள் அடியார்க்குச் சேர திறம்பட உழைத்த உத்தமியாக அவரைக் காண்கின்றோம்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்திவ் வுலகு"

என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க, பிறந்தவர் எல்லோர்க்கும் இறப்பது நிச்சயம். ஆதலால், அவரது இழப்பை மறந்து தேறுதல் அடைவதுடன் அவரை இழந்து துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
**பா. பாலகுமாரக் குருக்கள்**
மூளாய் முத்துக்குமார சுவாமி தேவஸ்தான
ஆலய குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு"

நேற்று இருந்தவர் இன்று இறந்தான் என்னும் பெருமையை இந்த உலகம் கொண்டிருப்பதாக பொதுமறையான திருக்குறள் கூறுவதற்கு இணங்க இவ்வுலகில் சிறப்புடன் வாழ்ந்தவர் அமரர் திருமதி பொன்மலர் இராசேஸ்வரன் அவர்கள். இவர் மூளாய் மத்தியில் நின்ற நிறைகுடம். அமரர் தம்பையா அவர்களின் மூத்த மகளாகிய இவர் மூளாய் முத்துக்குமார சுவாமி ஆலய தர்மகர்த்தாவாக இருந்து சமயப் பணியை இடைவிடாது ஆற்றியவர். அமைதியான பேச்சும் அன்பு கலந்த அரவணைப்பும் தன்னகத்தே கொண்ட இவர் மாதர் சங்கத் தலைவியாக, மூளாய் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான (INS-GD) நிறுவனத்தின் இயக்குனராக இருந்து சமூகத்திற்கு செய்த பணிகள் அளப்பரியன. தனது இறுதிக் காலம் வரை சமய, சமூக வேலைகளையே தனது முழுமூச்சாக கொண்டு வாழ்ந்ததை யாவரும் அறிவர். இவ்வாறு சமூகத் தொண்டாற்றிய அமரர் திருமதி பொன்மலர் இராசேஸ்வரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர், முத்துக்குமார சுவாமியின் பாதார விந்தங்களை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

**சி. ஜெயானந்தசர்மா**
பிரதம அச்சகர்
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Revd. Fr. Justin B Gnanapragasam
BTh(Pune)MA(Hull)PhD.Ed.(Southampton)
VICAR GENERAL

Bishop's House
Jaffna
Sri Lanka
Tel:021-222-8518
Email: frjustin@e-mnet.com

Email: gnanamjb48@gmail.com
14th September 2015

I was saddened to hear of the sudden death of Mrs.Ponmalar Rajeswaran from her brother, Mr.R.T.Vigna Raja. As I was out of the country at that time, I could not pay my last respects to her. An opportunity has been given to me now to express my sentiments. First of all, I wish to convey my deepest sympathies . to Ponmalar's brothers, sisters and relatives.

I have known Mrs.Ponmalar from 1976, after we returned to Ilavalai facing several displacements and deaths due to civil war. It was a time of rebuilding and rehabilitation. It was in this field I met Mrs. Ponmalar who was working with GTZ, and NGO, to rehabilitate people in their natural homes, after being displaced for more than four years.

Mrs.Ponmalar was a dedicated person who showed the love of God in kindness to the suffering people. She considered all as children of God and sought to seek **Him** in the anguished, suffering and poverty stricken people. Her life of service to the community cannot be measured. She initiated pre-schools in different places and also started training of Nursery teachers. She took on projects to construct multipurpose buildings, public toilets, water tanks and homes for the homeless.

Mrs. Ponmalar Rajeswaran was always proud to introduce me to other people as her cousin sister's brother-in-law. My sister-in-law, Dr.Rachel Navaneelan, had a great love for her and visited her each time she came to Sri Lanka. She supported Mrs. Ponmalar in her endeavours to build nurseries.

Mrs. Ponmalar was able to lead many to God through her concern and care for the needy. She was one who loved the poor and the less fortunate ones and has, thus, entered the heavenly portals as Rabindranath Tagore would say: "He who does good goes to the temple gate but the one who loves only enters the shrine".

**May she rest in peace with her Creator.**

*Revd. Dr. Justin B Gnanapragasam*
Vicar General – Jaffna Diocese



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி – 03

சமய குருமார்கள்

1. சிவஸ்ரீ பா. பாலகுமாரக்குருக்கள்
   மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான பிரதம குரு
2. சி. ஜெயானந்த சர்மா
   பிரதம பூசகர், மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
3. Message from the VicarGenreral
   Rev.Dr. Justin B. GnanaPragasam

02. நண்பர்கள்

1. பிரார்த்தனையுரை
   திரு. ஆறுதிருமுருகன்
   தலைவர் - துர்க்கா வேதஸ்தானம், தெல்லிப்பளைள
2. திரு. சிவா. நம்பியாரூரன்
   குடும்ப நண்பர், கனடா
3. பேராசிரியர் வி. ப. சிவநாதன்
   பொருளியல்துறை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
   தலைவர் - அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
4. திரு. இராசநாயகம்
   தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
   முன்னாள் அரச அதிபர் - கிளிநொச்சி
5. வை. இரகுநாத முதலியார்
   நம்பிக்கைப் பொறுப்பாளர்
   நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம்
6. திருமதி. வேலுப்பிள்ளை
   ஓய்வு நிலை அதிபர் விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
7. திருமதி. சரோஜா சிவச்சந்திரன்
   பணிப்பாளர், மகளிர் அபிவிருத்தி நிலையம்
8. S. Pradeepan, USA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற்செல்வரின் பிராத்தனை உரை

புகழ் பூத்த மூளாய்த் திருப்பதியில் சைவபாரம்பரியம் மிக்க குடும்பத்தில் தோன்றிய திருமதி.பொன்மலர் இராஜேஸ்வரன் அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகுந்த கவலை அடைகிறேன். மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி கோவில் அறங்காவலராகவும், சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்கமான நிறுவனத்தை (INS-GD) உருவாக்கி பாரிய இடம்பெயர்வுகள் ஏற்பட்ட காலத்திலும் சிறுவர்களுக்கு முன்பள்ளிக் கல்வியை வழங்க ஒழுங்கு செய்ததுடன் பல சமூக, சமுதாயப் பணிகளில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய வருமாகிய திருமதி. பொன்மலர் இராஜேஸ்வரன் அம்மையார் அவர்களின் பிரிவு ஈடுசெய்யமுடியாயதொன்றாகும். அமரர் தம்பையா தம்பதிகளின் மூத்த புதல்வியாக பிறந்து கல்வியில் வல்லவராக தன்னை வெளிப்படுத்தி புகழ்பூத்த இராமநாதன் கல்லூரியில் இவர் மாணவியாக விளங்கிய காலத்தில் உடற்பயிற்சி அணியின் தலைவராக விளங்கி, தேசிய மட்டத்தில் அக்குழு வெற்றி பெறுவதற்கு வித்திட்டவர். இவர் சகோதர சகோதரிகளுடனும் இனிதே வாழ்ந்து இல்லறவாழ்வில் இணைந்தார். பெற்றால் தான் பிள்ளையா? என்ற சிந்தனையோடு பல ஏழைச்சிறார்களின் கல்வி வாழ்வாதரத்திற்கு தன்னாலான பங்களிப்புக்களை செய்தார்.

ஆங்கில மொழியில் புலமையாக விளங்கிய இவர், தன்னார்வ தொண்டு நிறுவனத்தை (INS-GD) தோற்றுவித்து பல உலக அமைப்புகளுடன் இணைந்து போர்ச் சூழலில் அயராது உழைத்தார். அகதிமுகாம்கள், கணவனை இழந்து கைம் பெண்களாக வாழும் பெண் தலைமையிலான குடும்பத்தினர் அனைவரையும் நாடி அளப்பரிய தொண்டு செய்தார். மரநடுகைத்திட்டத்தை ஊக்குவித்து உதவினார். வேலையற்ற பெண்கள் பலருக்கு தொழிற்பயிற்சியை ஏற்படுத்தி தொண்டாற்றினார். ஏழைகளின் பங்காளியாக இரவு பகலாக அலைந்து திரிந்து உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது பிரியத்துக்குரிய சகோதரனும் இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதியுமாகிய திரு. இ.த.விக்னராஜா அவர்கள் நீதித்துறை சேவைகளை ஆற்றி வந்த காலத்திலும், வடமாகாண சபையின் நிபுணத்துவ சட்ட ஆலோசகராக செயலாற்றிய காலத்திலும் தங்கள் பரம்பரைக் கோவில் பணிகளை குடும்பத்தினர் சார்பில் நிர்வகித்து வந்தமை இவரையே சாரும்.

இயற்கை பசளையை பேணவேண்டும் என கோரிக்கை விடுத்து பல பொதுஸ்தாபனங்களுக்கு அதற்கான உபகரங்களை கையளித்து வந்தார். இவர் பல ஏழைக்குடும்பங்கள் வாழ்விற்கு பசுவளர்ப்பு திட்டத்தையும் உருவாக்கி பசுக்களைத் தானமாக பலரிடம் பெற்று ஊக்குவித்தார். கடைசி நிமிடம் வரை சமூகத்துக்காக வாழ்ந்த இப் பெருமாட்டியை நன்றியுள்ள சமுகம் என்றும் மறக்காது. அன்னாரது ஆத்மா சாந்தி பெற துர்க்கா தேவியை பிரார்த்தித்து அன்னாரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**கலாநிதி. ஆறு.திருமுருகன்**
தலைவர் – (சிவபூமி அறக்கட்டளை,
தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தானம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A day in the last week of August. My wife Malar had a call conveying a sad message: 'Ponmalar has passed away.' The message was from Rajeswary Nallathamby, a mutual friend of us and hers, living In City of Pickering next to the City of Ajax where I live. Memories of a glorious time and life long gone by came gushing to my mind. Ponmalar and her husband Rajeswaran, Rajes to friends, who predeceased her, and my wife and I lived as neighbours in two of perhaps the most scenically alluring spots in Kandy where Rajes and I were colleagues at St. Sylvester's College.

The banks of the Mahaweli Ganga were where we lived as neighbours. First at houses perched on high ground overlooking the river at the Watapuluva Housing Scheme, and later at MaCallums Drive skirting the Mahawli Ganga just past the famous tourist attraction that is Elephant Bath by the side of the Kandy - Matale road. My first meeting with Rajes was while he was still a bachelor joining me at St.Sylvester's College on transfer from Kathiresan College, Nawalapitya. He lived at the Kandy YMCA where I joined him for two years from 1964 having sent my family home to Kopay. I was then in the midst of a part time Diploma in Education course at the Peradeniya Campus. Interestingly enough Rajes was in this as well with me. Somehow we seemed to move in lock step for a spell! This was the time when Rajes in romantic moods would sing his praises of his then fiancée Ponmalar. We were not to be disappointed. Ponmalar was all of Rajes's praises and more. We were soon to know her virtues on her arrival in Kandy after her wedding. She was friendly, outgoing and warm at hosting Rajes's friends, qualities that would stand her in good in days to come. Rajes left for a stint



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of teaching in Kaduna State in Nigeria in the years 1980-1984. Motherhood denied, Ponmalar sought a selfless and noble cause serving as mother and teacher to a group of Tamil and Nigerian pre school children in the vicinity of the school her husband was posted to serve in. Having got into stride as a social activist in Nigeria, Ponmalar on leaving Nigeria enrolled and graduated as Nursery School teacher at the Colombo suburban Galkissa Woodland Nursery School. Returning home to Moolai she opened her Model Nursery School and trained teachers in the art of teaching pre school children. The Moolai Women's Society, Institue of Nursery Studies and Gender Development (INS-GD), and Lions Club gave her project their assistance.

Ponmalar however was soon destined to take on higher responsibilities. Political unrest and ensuing troubled times called for Foreign Non Government Organizations and local organizations to step in and provide relief to people in distress. Such organizations called for volunteers to help with the dispensation of much needed services. The fact that Ponmalar was ardently involved with numerous organizations over time speaks for her dedication to serve those in need of help.

From house maker to teacher. From teacher to social worker. It has been a meteoric rise for Ponnmalar. Her resilience, motivation and tireless commitment to serve is admirable. May she rest in peace.

**S. Namibyarooran**
13 Byram Downs Street, Ajax ON,
*LIZ 1R5, Canada.*
*Phone: 905-239-3970*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பொன்மலர் அக்கா...

எவராலும் பறிக்கப்பட முடியாத ஒரே சொத்து கல்வி. போர் இடர்காலத்திலும் பறிக்கப்பட முடியாததொன்றாக விளங்கிய கல்வியை வளர்த்தெடுப்பதில் தனது வாழ்நாளை உரமாக்கியவரே அமரர் பொன்மலர் இராசேஸ்வரன். அவரது மறைவு இலங்கை வாழ் தமிழரின் முன்பள்ளி செயற்பாட்டில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. திட்டமிட்டு முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, அவர்களூடாக மாணவர்களுக்கு இலகு முறையில் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் பொன்மலர் அக்காவே.

ஆரம்பக் கல்விக்குப் போகமுன்னரே சமூக விழுமிங்களோடு அறநெறியில் மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற அவாவில் அவர் பல அணி முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவித்த பெருமை அவரையே சாரும். யாழ்ப்பாணத்துப் பெண்களில் முதன்மையான பெண்ணாகத் திகழ்ந்தார். கிராமத்து மக்களின் பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்து, அதற்கு முன்னுரிமை கொடுத்து, விவசாயிகளுக்கு நவீன விவசாயப் பயிற்சிகளையும், நவீன விதை நாற்றுக்களையும் தனது அரசசார்பற்ற நிறுவனத்தினூடாக வழங்கி வாழ்வாதாரத்தைக் கல்வியூடாகவும், உற்பத்தி நடவடிக்கை ஆலோசனையூடாகவும் மேம்படுத்தியவர்.

அவர் அரச சார்பற்ற நிறுவன ஒன்றியத்தில் தனது செயற்பாடுகளையும் அதன் நோக்கத்தையும் கூறி அரசாங்க அதிபரிடம் செயற்பாட்டு அனுமதியைப் பெறுவதில் அவர் வல்லவராகவும் திகழ்ந்தார். நல்ல திட்டமிடும் ஆளுமையும், நேர்மையும், நீதிநெறி வழுவாத இயல்பும் அவர் வாழ்க்கையை மற்றவர்கள் முன்மாதிரியாகக் கொள்வதற்கு வழிவகுத்தது. பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய புதுமைப் பெண்ணாகவே அவர்காலப் பெண்கள் மத்தியில் வாழ்ந்தார். போர்க்கால நெருக்கடிகள் மத்தியில் தன்னால் ஆன கல்விச் சேவையை வழங்க அவர் பின்நிற்கவில்லை.

அவர் குடும்பதில் நல்ல மனைவியாகவும் இருந்தார். அவர் கணவர் என்னோடு நல்ல தொடர்பு வைத்திருந்த காலத்தில் அவர் சேவைக்கு அவர் கணவர் காட்டிய ஆதரவு, அவர் நல்ல மனைவியாக இருந்தார் என்பதற்கு ஆதாரம்.

அரசசார்பற்ற நிறுவனங்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பு சூழச் செயற்பாட்டிலும் நம்பிக்கையுடயவராக இருந்து எல்லோரையும் அரவணைத்து நடந்தமை சமூகத்தின்பால் அவர் கொண்ட பற்றுதலை வெளிக்காட்டுகின்றது. உண்மையில் அவர் சேவையை என்றும் நினைவில் நிறுத்தக்கூடியதாக முன்பள்ளி ஆசிரியர்களும், அவர்களின் நல்ல சேவையும் தொடர்கின்றது.

அவர் பற்றி சில நினைவுகளைப் பகிர்வதற்கு எனக்களிக்கப் பட்ட சந்தர்ப்பத்தை மகிழ்வோடு என்றும் நினைவு கூறுவேன். நல்ல பணி செய்தார். அவர் புகழ் என்றும் நிலைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**பேராசிரியர் வி. பி. சிவநாதன்**
பொருளியல்துறை – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தலைவர் – அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivamayam

# மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்

# MAHADEVA SUWAMIGALCHILDREN HOME

Reg. No: NP/24/2/1/CH/13-Department of Probation & Child Care Services, Northern Province (01.09.2009)
Reg. No: HA/04/KL/16-Department of Hindu Religious & Cultural Affairs (05.05.2008)
வங்கிக் கணக்கு இல 9991351 - இலங்கை வங்கி கிளிநொச்சி
**Bank A/C No: 9991351 Bank of Ceylon, Kilinochchi**

E-Mail-rasa46@yahoo.com Web: www.mahadevahome.org Contact No-021-4923118, 077-0604950

**Jeyanthinagar**
**Kilinochchi**
**Srilanka**

FACE BOOK ID: MAHADEVA SUWAMIGAL CHILDREN HOME

ஜெயந்திநகர்
கிளிநொச்சி
இலங்கை

***Patrons***

1. *Ven. Kameshananatha Mahadeva Suwamigal (Chief Priest Mahadeva Ashramam Jeyanthinagar)*
2. *Mr. K. Sittampalam (Former Professor University of Jaffna)*
3. *Mr.S.Srinivasan (Additional Government Agent, Kachcheri, Kilinochchi)*
4. *Mrs.P. Jeyarani (Assistant District Secretary, Kachcheri, Kilinochchi)*
5. *Mr. Gobalapillai Nageswaran (Divisional Secretary, Karachchi, Kilinochchi)*

***Senior Consultants***

6. *Dr. P. Kandasamy (Former Deputy Director, Ministry of Agriculture & Land)*
7. *Mr.K.V.Panchalingatharai Representative -UK*
8. ***Agriculture Consultant***
*Mr.S.Thurairasa (Retired Agricultural officer, Department of Agriculture)*

***Hon. President***

9. *Mr.T.Rasanayagam (Former Govt. Agent, Kachcheri, Kilinochchi) Former Deputy Chief Secretary – Northern Province*

***Senior Vice Presidents***

10. *Mr.S.Mohanabavan (Director, Planning, Kachcheri, Kilinochchi)*
11. *Mr.S. Selvarudiran (Retired TO, Paranthan Chemical Corporation)*
12. ***Vice Presidents***
*Mr.A.Kanagaratnam, (Retired Principal)*
13. *Mr.S.Yasotharan, (Sivaguru Hardware, Kilinochchi)*

***General Secretary***

14. *Mr.Pon. Nithiyananthan (J.P) (Former Special Commissioner, Karachchi)*

***Assistant General Secretary***

15. *Mr.S.Vigneswarajah, Principal Hindu College, D-7, Uruthirapuram, Kilinochchi)*

***Treasurer***

16. *Mr.S. Pathmasiri (Rural Development Officer, Kilinochchi)*

***Executive Committee Members***

17. *Mr. S. Tharmaratnam (Retired Asst. Director of Education)*
18. *Mr. K. Vairamuthu (Retired Deputy Director of Education)*
19. *Mr. N. Sivaneshan (Grama Sevaka Officer)*
20. *Mr. S. Premkumar (Development Officer, Kachcheri)*
21. *Miss. R. Parasakthi (Management Assistant, DS Office)*
22. *Mr.S.Raththinasingam (Retired Officer Paranthan Chemical Corporation)*
23. *Mr. B. Sathananthan (Management Assistant, ENRSP, Kachcheri, Kilinochchi)*
24. *Mrs. S.Jenarththanan (Assistant Director of Planning)*
25. *Mr. M.Navaratnam General Merchant, Malankavil*
26. *Mr.S.Sinnathamby (Retired Grama Sevaka Officer)*
27. *Mr.A.Nagendram (Retired Project Director)*

07.09.2015

திரு R.K. [illegible]........
[illegible]...............

அன்புடையீர்

இரங்கல் செய்தி

அமரர் பொன்மலர் இராசேஸ்வரன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் -வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூற்றுக்கிணங்க மண்ணுலகில் வாழ்ந்து மழலைகளின் தாய் மடியாம் அமரர் பொன்மலர் இராசேஸ்வரன் அவர்களின் திடீர் மறைவானது எம்மை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. எனினும் "பிறப்பு உண்டேல் யாவர்க்கும் இறப்பு உண்டு" என்ற உலக நியதிக்கு இணங்க அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பது போல மண்ணுலகிலே வாழ்ந்து வருங்காலத்தில் மழலைப் பள்ளிதனை ஆரம்பித்து மழலைச் செல்வங்களுக்கும் மழலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அயராது ஆர்வம் கொண்டுழைத்து பெருமை சேர்த்த பெண்மணி. கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் போதும் மிகவும் நெருக்கடியான காலங்களில் தாய்மைப் பணியினை கிளிநொச்சியிலும் தொடர்ந்து பணியில் நிறைவு கண்ட வகையில் கடமையே கண்ணாகக் கொண்டு பாரினில் மிளிர்ந்தவர்.

"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர்-வேண்டா!
நமக்கும் அது வழியே! நாம் போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்"

அதனால் அவர் தம் பிரிவுக்காக எம் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவரது ஆத்மா எல்லாம் வல்ல உருத்திரபுரீசுவரனது திருவடியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இவ்வண்ணம்

தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி

தி. இராசநாயகம்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன்பு மிக்க திரு. விக்னராசா அவர்கட்கு,

பொன்மலர் உங்கள் அருமை அக்கா இறைவனின் பாதங்கள் சேர்ந்தமை அறிந்தேன். அவர்கள் எம்மிடையே வாழ்ந்து மறைந்தமையிட்டு கவலைதான். அவர்கள் நீண்ட காலம் படுக்கையில் நோய்களால் அவஸ்தைப்படாது அவர்களது பிரிய கணவர் இராசேஸ்வரன் சற்று ஏறக்குறைய ஒரு வருட அவகாசத்தில் தன்னுடன் இணைத்துக் கொண்டார், என எண்ணி ஆறுதல் பெறுவேன். இராசேஸ்வரன்-பொன்மலர் தம்பதிகளை நான் கண்டி மாநகரில் 1972ஆம் ஆண்டு முதன் முதலாகச் சந்தித்ததே ஒரு எதிர்பாரத நிகழ்ச்சிதான். பின்னால் எங்களுக்கு இவர்களுடன் ஓர் நெருக்கமான பிணைப்பு, நட்பு ஏற்படவுள்ளது என்பதற்கு எங்களின் இச் சந்திப்பு ஓர் அத்திவாரமாக அமைந்தது எனாலாம்.

பின்னர் இராசேஸ்வரன் தம்பதிகளை, இராசேஸ்வரன் நைஜீரியா நாட்டில் ஆசிரியப் பணி ஆற்றிய போதும் சந்தித்தேன் எதிர்பாராமல்.

அதன்பின்னர் இராசேஸ்வரன் ஓய்வுபெற்று சூளாயில் வசித்த காலத்தில் பொன்மலர் சூளாயில் 'மாதர் சங்கம்' நடாத்திய நாட்களில் பெண்களுக்குத் தையல் பயிற்றுவிக்கத் தகுந்த ஆசிரியை ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார்கள். எனது மனைவி சாந்தாதேவி தையல் தொழிலில் ஓரளவு நிபுணத்துவம் பெற்றிருப்பதை அறிந்து தனக்கு உதவ முடியுமா என்று கேட்டு வந்தார்கள். கோயில், மற்றும் பல பொறுப்புகள் இருப்பதால் தன்னால் சூளாய் வந்து தையல் கற்பிக்க இயலாது என்று சொல்லிவிட்டார்கள். அதனால் எங்கள் வீட்டிற்கே சில பெண்களை அனுப்பித் தையல் தொழிலைக் கற்பித்தார்கள்.

என் வாழ்க்கைத் துணையிடமும் தன்னிடம் உள்ளதுபோல் சமூக சேவைசெய்யும் மனப்பான்மையும், ஆர்வமும் நிறைந்திருப்பதை அறிந்து, தான் செல்லும் கூட்டங்களுக்கும், இடங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் அவர்களையும் தன்னுடன் வரும்படியும், ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் தெரிவித்துத் தனக்கு உதவுமாறு வற்புறுத்துவார்கள். வசதியீனங் களால் என் மனைவியால் அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற இயலவில்லை. இது அவர்களுக்கு ஒரு பெரிய மனக்குறை. யாழ்ப்பாணம் வரும் பல சந்தர்ப்பங்களிலும் எமது வீடு வந்து, தான் செய்யும், மேற்கொண்டு இருக்கும் வேலைகள், செயற்றிட்டங்கள், அவற்றில் உள்ள குறை நிறைகள், திட்டங்களின் பலா பலன்கள் பற்றி உரையாடிச் செல்வார்கள். என் மனைவியுடன் மிக ஆர்வமாக உரையாடும் போது தனது ஆதங்கங்களைத் தெரிவித்து, மனக் கவலைகளைக் கொட்டி ஆறுதல் பெற்றுச் செல்வதை நான் பல முறை அவதானித்து இருக்கின்றேன்.

இனி... பொன்மலர் பற்றிய என் நினைவுகளைப் பின் நோக்கிச் சென்று பார்க்கிறேன். அவை காலத்தாலும் மறக்க முடியாதவை. சைவத் தமிழ்ப் பெருங்குடியில் மூளாய் தபாற்கந்தோர் அதிபர் தம்பையா தம்பதிகளுக்கு மூத்த புத்திரியாகப் பொன்மலர் பிறந்தார். பெற்றோர் பிரியமுடன் வைத்த 'பொன்மலர்' என்னும் இயற்பெயர், பின்னாளில் அது காரணப் பெயராகவும் அமைந்து இருந்தது. எவ்வளவு பொருத்தம். இறைவன் திருவருளால் சூட்டப்பட்ட பெயர் என எண்ணுவேன்.

தகப்பனார் தம்பையா, பலப்பல தலைமைப் பொறுப்புக் களை ஏற்று, மூளாய்ப் பகுதிக்கு அதன், வளர்ச்சிக்கு ஏராளமான கைங்கரியங்களைச் செய்து வந்தமையைப் பார்த்தே பொன்மலர் வளர்ந்தார். தகப்பனாரிடத்துப் பொலிந்த தொண்டுள்ளம், பொன்மலரின் இரத்தத்தில் ஊறி இருந்து அவர்களையும் பலப்பல சமுதாய நலப்பணிகளில் ஈடுபட வைத்தது எனலாம்.

இவர்களது பரம்பரைக் கோயில்களின் இறைவர், வதிரான், பிள்ளையார் மற்றும் மூளாய் முத்துக்குமாரசுவாமி இவர்களை இளவயது முதலே மனம், மொழி, மெய்களால் வழிபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தமையால் பொன்மலரின் வாழ்வு இறைவனால் செம்மைப் படுத்தப்பட்டது. தகப்பனார் வழியில் மண்ணில் நல்ல வண்ணம் வாழ அவர்களது உள்ளம் பண்படுத்தப்பட்டது. ஆன்ம பலம்பெற்ற தாய் தந்தையரின் வழிகாட்டலில் ஆத்ம ரீதியாகப் பலப் பல தர்மசிந்தனைத் தெளிவுகளைப் பெற்றுக் கொண்டார்.

தன்னலமற்ற தொண்டு, தொண்டு மனப்பான்மை, சொல்லும் செயலும் ஒன்றிணைந்து கற்றபடி நின்று, வாழ்ந்து, குலப்பெருமையை ஓங்கச் செய்த வாழ்க்கை நெறி இவை இளமையிலேயே பொன்மலர் ஓதாத உணர்ந்து பெற்ற செல்வங்கள்.

இறைவனால் ஆசிர்வதிக்கப்பெற்றவர். இறைபணி செய்து வந்த கரணவாய் தாமோதரம்பிள்ளை ஆசிரியர் மகன் இராசேஸ்வரன் அவர்களைத் தனது வாழ்க்கைத் துணைவராய் பெற்றார். இராசேஸ்வரன் மனம் மகிழும் துணைவியாகி அவர் வாழ்வின் பெருமைகளுக்கு அவருடன் கை கோர்த்து நடந்து, அவருக்கு பக்க பலமாக இருந்து அவர் மனம் மகிழ வாழ்ந்தார். மனம் ஒத்த ஆதர்ச தம்பதிகள்.

இராசேஸ்வரன் தம்பதிகள் குடும்பத்தின் மூத்தவர்களாக விளங்கித் தங்களது உறவுகளை அன்புடன் பேணி, அனைவரினதும் வளர்ச்சிக்கும், நல்வாழ்விற்கும் மூலகாரணர்களாக விளங்கினார்கள் என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

பிறந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம் என்றில்லாமல் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் தன்னாலான ஓர் பணியைச் செய்ய வேண்டும் என்ற அவா பொன்மலர் உள்ளத்தில் உதித்தது. இராசேஸ்வரன் நைஜீரிய நாட்டில் ஆசிரியப் பணி ஆற்றியபோது, அவர் பணி புரிந்த பாடசாலையில், வெளிநாட்டார் பிள்ளைகள் ஆரம்பக்கல்லூரியில் ஓர் மொன்றிசோரி பள்ளியை ஆரம்பித்துத் திறம்பட நடாத்தினார். அங்கு அந்நாட்டுச் சிறுவர்களும் கல்வி பயில ஆரம்பிக்கவே, இம் முயற்சி அந்நகர் மாநகர முதல்வராலும் பாராட்டப் பெற்று, அப் பள்ளியின் நடைமுறைக் கொள்கைகட்குப் பொருளுதவியும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை திரும்பியதும் பொன்மலர் இராசேஸ்வரன் தம்பதிகளால் தங்கள் எஞ்சிய வாழ்நாளினை வீணாக்கி வாழ முடியவில்லை. சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக எத்தனையோ துறைகளில் ஈடுபட்டுத் தங்களது அர்ப்பணிப்பையும் பங்களிப்பையும் நல்கினார்கள். அவர்கள் சாதனைகளைப் பட்டியல் இட எனக்குத் தற்சமயம் அவை ஞாபகங்களில் இல்லை. பொன்மலர் மூளாய் மாதர் சங்கத்தைத் திறம்பட நடாத்தி எத்தனையோ மகளிருக்கு வாழ்வாதார, பொருளாதார வளங்களைக் கிடைக்கச் செய்தார். தன்னை மறந்து ஒவ்வொரு காரியமும் ஏதோ ஒரு காரண காரியத்திற்காக நடைபெறுகின்றன. இதில் தனக்கென வாழ்ந்தது எதுவரை, எவை எவை போராட்டங்களாக அமைந்தன. எவை மன நிறைவைத் தந்தன, எவை மனதை இலேசாக்கி முன்னெடுக்கும் சிந்தனைகளை ஊறவைத்துத் துணிந்து சமுதாயப் பணிகளை மேற்கொள்ள வகை செய்தன போன்ற வாழ்க்கைப் பாடங்கள் இவரைப் புடம் போட்டன.

செயல் வயலில் நாற்றங்கால் மூளையாய் முளைத்தவை, பின் அவை கதிர் குலுங்கும் பயிராக விளைந்தமை கண்டு இவர் குதூகலித்த சந்தர்ப்பங்கள் எத்தனையோ? எதிலுமே இவர்களது அணுகுமுறை ஆழமானதும் தனித்தன்மை கொண்டதும் ஆகும்.

சொந்தக் சோகங்களையும் வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்று நிலை குலையாமல் வாழ்ந்து சமூக சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து தன்னளவில் வெற்றி கண்டார். இவர்களது நன் முயற்சிகளும், செயல் திட்டங்களும் இலைமறை காயாகவே அமைந்து விட்டன என்பது என் கவலையாகும்.

இவர் ஈடுபட்ட துறைகள் உணர்வு பூர்வமானதாக அமைந்த சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் உள்ளவர்கட்கு வாழ்வாதாரத்தை வழங்குவனவாக அமைந்தன. வெற்றி கிடைக்குமா என்ற நம்பிகை அற்ற எத்கனையோ செயல் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி, முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை என்ற தத்துவத்தை மற்றவர்கட்கு எடுத்துக் காண்பித்தார். அவரது இல்லமும் காணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதனைக் கூடங்களாக விளங்கின. இயற்கை உணவு, சத்துணவு, இயற்கை மூலிகைகள் என உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவுவகைகளைத் தயாரித்து மக்களுக்கு விநியோகித்தார். இவற்றுக்கெல்லாம் தன்னையே உதாரணமாக்கிக்கொண்டார்.

நல்ல நண்பர்கள் பலரைத் தன்னுடைய ஆக்கபூர்வமான பணிகட்குத் தன்னுடன் இணைத்துக் கொண்டார். இவர்களது கனிவான முகமும், ஆளுமைத் தன்மையும்,தொண்டுள்ளமும், எப்பொழுதும் புன்னகை பூத்த முகமும் சமுதாயப் பணிகளில் ஈடுபட்ட பலரை வசீகரித்தன. ஒரு முறை சந்தித்தால், பின்னரும் என்றென்றும் மறக்க முடியாதவர். 'டல்' ஆக இருப்பவர்களை. யும் 'மூட் அவுட்' ஆக இருப்பவர்களையும் தனது கனிவான ஆளுமையான சொல்வன்மையால் உற்சாகப் படுத்திச் செயலில் இறங்க வைப்பார்.

மூளாய் முத்துக்குமாரசுவாமி கோயில் அறங்காவலராகப் பணி ஆற்றியபோது ஆலயம் சம்பந்தமாக எழுந்த எத்தனையோ பிரச்சினைகளுக்கு தளர்ந்து போகாது முகம் கொடுத்து ஆலய நித்திய நைமித்திய பூசைகளை எதுவித குறையும் இன்றி நடைபெறச் செய்தார்.

சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான வேலைத் திட்டங்களே இவர்களது முழு மூச்சாக விளங்கியது. தனது தொண்டு நிறுவனத்தை "INSTUTITE OF NURSARY STUDIES AND GENDER DEVELOPMENT" என மாற்றி தன்னாலான சேவைகளை ஆற்றினார்.

உதயன் பத்திரிகையில் *(09.02.2014)* இவர்களது பேட்டி இவர்களது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றது. "**வடக்கில் பெண்களின் தற்போதைய நிலை**" பற்றிக் கேட்கப்படும் கேள்விக்கு இவர்களது பதில் ஆணித்தரமாக அமைந்தது. பொன்மலரின் பதில்கள் :

"ஆணோ பெண்ணோ மற்றவர்களில் தங்கியே வாழும் நிலையே உள்ளது. தனியே யாராலும் வாழ முடியாது. எங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் வளப்படுத்த வாய்ப்புக்கள் கொடுக்கப்படுவதில்லை. இதில் பெண்களின் நிலை சற்று அதிகம். எங்கள் வாழ்வியல் கலாச்சாரம் வித்தியாசமானது. அதனைத்தவிர்த்து மேலைத்தேச நாடுகளின் வாழ்வியல் கலாச்சாரத்தை நாங்கள் பின்பற்றி நடக்கும் போது நிறையத் தவறுகள் ஏற்படுகின்றன. கலாச்சாரச் சீரளிவுகள் தலை தூக்கி உள்ளன.

குடும்பப் பெண்கள் உளரீதியாகப் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். பிரச்சனைகள் வரும்போது பெண்ணைத் தான் குறை கூறுகின்றார்கள். பெண்கள் பக்கம் இருக்கும் நியாயங்களை யாரும் கண்டு கொள்வதில்லை. கணக்கிலும் எடுப்பதில்லை. எமது சமுதாயத்தைப் பொறுத்த வரையில் இதை வெளிப்படுத்துவது சரியான கஷ்டம். இதனால்தான் வாய்மூடி மௌனமாக இருக்கிறார்கள்.

பெண்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும். முதலில் எங்களை வளப்படுத்த வேண்டும். திறன்களை, தன்னம்பிக்கையை மேம்படுத்த வேண்டும். தகுதிகளை வளர்த்துக் கொண்டால் துணிந்து நின்று பெண்களின் பிரச்சினைகளை முன்வைக்கலாம். அப்பொழுது யாராலும் மறுத்துப்பேச முடியாது.

பெண்கள் தமது வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். தமக்குத் தாமே பாதுகாப்பைக் கொடுக்க வேண்டும்.

பாதிக்கப்படும் பெண்களும் சட்டரீதியான தீர்வுப் பற்றிக் கேட்டபொழுது" பெண்களுக்குத் தேவையான சட்டத்தில் இடம் இல்லாதது தொடர்பாக சிந்திக்கவும் இல்லை. தேசவழமைச் சட்டம் வேறு. சட்டம் வேறு. சட்டத்திலும் பெண்களுக்கும் பலவீனம்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களில் தங்கி வாழும் நிலையில் பெண்கள் இருப்பதால் அரசியலிலும் பெண்கள் எப்படி அதிக ஈடுபாடு காட்ட முடியும். சமூகப் பிரச்சினைகளுக்கு அழகியல் ஈடுபாடு பெண்களுக்கு மிக அவசியம் என்பதாக அமைந்து இருந்தது.

பொன்மலர் இந்து சமயத்தின் பழம் பெரும் பெருமைகளை இக் காலச் சைவ மக்களும் தெரிந்துகொள்ள இலண்டன் மாநகரில் நீஸ்டென் இடத்தில் அமைந்துள்ள "ஸ்ரீ சுவாமி நாராயணன் திருக்கோயில்" ஆங்கிலத்தில் பிரசுரித்து இருந்த "Understanding Hindusium" என்ற நூலைத் தமிழாக்கம் செய்வித்து வெளியிட்டிருந்தார்கள்.

இதைத் தவிரக் காலத்துக்குக்காலம் சிறுவர் நலன்கள் மற்றும் சத்துணவுகள் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்டு வெளியிட்டு Institute of Nursary Studies and Gender Development என்ற தங்களுடைய ஸ்தாபனத்தின் செயற்பாடுகளை மக்களுக்கு விளக்கி இருந்தார்கள்.

INSGDmoolai, ORG என்ற இணையத்தளத்திற்குச் சென்றால் இவர்களுடைய அரும்பெரும் சேவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

இவர்களுடைய அரிய சேவைகளைப் பாராட்டி அரசு சார்பற்ற நிறுவனங்கள் சில இவர்களுக்குப் பொருளுதவிகள் செய்து சில திட்டங்களைக் கொடுத்து அவற்றை நிறைவேற்றும் வழிவகைகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டிருந்தார்கள். சில நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகட்கு இவர்களைச் சென்று அங்குள்ளவர்களுடன் கலந்து உரையாடி சில திட்டங்களை நிறைவேற்றும்படி கேட்டிருந்தார்கள். நோய்வாய்ப்பட்ட நேரங்களிலும் கடமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாகக் கொண்டு அவ் இடங்கட்குப் பயணித்துத் தரப்பட்ட வேலைகளை நிறைவேற்றித் தன் வாழ்வில் மனநிறைவு பெற்றார்கள்.

பொன்மலரின் தன்னடக்கம் பொறுப்புக்களைச் சுமந்து செயலாற்றல், கருமமே கண்ணாகக் கொண்டு என்றும் பிறர்க்குரியவனாக வாழுதல் என்பன எல்லோராலும் முடியாது என்று பலரும் பாராட்டி இருக்கின்றனர்.

இத்தகைய சேவைகளை மூளாய்ப்பதியில் வாழ்ந்து இலை மறை காயாகப் பணி ஆற்றி அண்மையில் இறைபதம் அடைந்த பொன்மலரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

இதுவே எனது "கண்ணீர் அஞ்சலியும்" ஆகும்.

**வை. இரகுநாதமுதலியார்**
நம்பிக்கைப் பொறுப்பாளர்,
நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத சமூகஜோதி

திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்அவர்கள் கல்விக்காகவும், சைவசமயத்திற்காகவும் அரும்பெரும் தொண்டாற்றிய மூளாய் கிராமத்தைச் சேர்ந்த தபாலதிபர் இரசாமசாமி தம்பையா J.P அவர்களின் மூத்த தவப்புதல்வியார்.

ஸ்ரீமான் இராமசாமி தம்பையா அவர்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் ஸ்தாபகர் நிச்சிங்கம் கனகரத்தினம் முதலியார் அவர்களின் உறவினராவர். ஸ்தாபகர் மகன் முகாமையாளர் கனகரத்தினம் செல்லப்பா அவர்களின் மறைவின் பின் *1943-1946* வரை தபாலதிபர். இராமசாமி தம்பையா J.P அவர்களே கல்லூரியின் முகாமையாளராக விளங்கினார். *1945* ஒக்டோபர் முதல் அன்றைய கல்வியமைச்சர் C.W.W கன்னங்கரா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வித்திட்டம் அமுலுக்கு வந்ததன் பயனாக முகாமையாளர் இ. தம்பையா அவர்கள் தமது சொந்த நிலங்களைக் கூட விற்று கல்லூரி நிர்வாகத்தைத் தளராது நடாத்தினார் என்பது வரலாறு.

இவரின் வழித்தோன்றலான திருமதி. பொன்மலர் இராஜேஸ்வரன் அவர்கள் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவியாவர். தாம் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு உரிய வழிகாட்டலைத் தந்துதவிய, தனது கல்லூரி மாதாவிடம் மிகுந்த விசுவாசம் மிக்கவராக இருந்து, பல செயற்றிட்டங்கள் மூலம், மிகுந்த கஷ்டமான சூழலிலும், கல்லூரியின் அபிவிருத்திக்கு அயராது உழைத்தவராவர்.

*1997*ஆம் ஆண்டு முதல் யாழ் மாவட்ட புனர்நிர்மான வேலைகளைச் செய்வதற்கு முதன் முதலாக முன்வந்த ஜேர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நுட்ப நிறுவனத்தில் (GTZ) பணிபுரிய திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இக்காலத்தில் GTZ தனது கொள்கைக்கு அமைவாக பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் பாடசாலைச் சமூகத்தை பங்காளியாக இணைத்து, பங்கேற்க வைக்க முயன்றது. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போரினால் பாதிக்கப்பட்டு தமது பிரதேசத்திற்கு திரும்பி அடிப்படை வசதிகளைக் கூட அற்ற நிலையில் வாழ்ந்த மக்களிடையே "அரசாங்க பாடசாலைக் கட்டடங்களை புனர் நிர்மாணம் செய்வதற்கு ஏன் உதவவேண்டும்"? என்ற எண்ணம் மேலோங்கி நின்றது.

இவர்களை ஆற்றுப்படுத்தல் செய்ய வேண்டிய பொறுப்பு திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. பல பாடசாலைகளில் பல தடவைகள் திரும்பத், திரும்ப சமூகத்தவரைச் சந்தித்து கலந்துரையாடல் மூலம் நீண்ட கால அபிவிருத்திக் கண்ணோட்டத்தினை வலியுறுத்தி, நம்பிக்கை ஏற்படுத்தி புனர்நிர்மாண வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்று வதற்கு சலிப்படையாது உழைத்து வெற்றிகண்டவராவார்.

GTZ இன் பாசடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விக்ரோறியாக் கல்லூரியையும் உள்வாங்கி, நீண்ட காலமாக பராமரிப்பின்றி இருந்த கல்லூரியின் தொழில்நுட்பக் கூடம், கணித மூலவள நிலையம் என்பன புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. இதன் மூலம் மாணவர்களுக்கு கற்றலுக்கான உகந்த சூழல் வழங்கப்பட்டு, திறன்கள் வளர்த்தெடுப்பதற்கு அனுசரணை வழங்கினார். அதுமட்டுமல்லாமல் சுழிபுரம் பிரதேசத்து மக்கள் மீளக் குடியமரத் தொடங்கிய நிலையில் கல்லூரியின் மாணவர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. அதனாலேற்பட்ட தளபாடப் பற்றாக்குறையும் GTZ அனுசரணையினால் நிவர்த்தி செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001 ஆம் ஆண்டில் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் அவர்கள் கனடா நாட்டிற்கு சென்றபோது, இவரது சகோதரன் திரு.த. அழகராசா அவர்களின் தலைமையில் செயற்பட்டுக் கொண்டிருந்த கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர் களைச் சந்தித்து கல்லூரியின் விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற் கான அத்தியாவசியத்தையும், கூறி திறந்த வெளியரங்கினை அமைப்பதற்கு, ஆர்வத்துடன் காத்திருக்கும் பாடசாலைச் சமூகத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொண்டார்.

இவ்வகையான செயற்றிட்டங்களுக்கு கல்வி அமைச்சோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ ஆதரவு வழங்கக் கூடிய நிலையி லில்லை. ஆகவே இச் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதற்கு, பழைய மாணவர்கள் பங்கேற்பு தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற அழைப்பு விடுத்து வந்திருந்தார்.

கனடா பழைய மாணவர் சங்கத்தினரும் இதனைக்கருத்திற் கொண்டு 400m ஓடுபாதை கொண்ட விளையாட்டு மைதானம் விக்ரோறியாக் கல்லூரியில் அமைப்பதற்கு அனுசரணை வழங்கினார்.

வலிகாமம் வலய அரச பாடசாலைகளுள் விக்ரோறியாக் கல்லூரியிலேயே 400m ஓடுபாதை கொண்ட விளையாட்டு மைதானம் முதன் முதலில் அமைக்கப்பட்டது. இதனால் கல்லூரியின் விளையாட்டுத்துறை சிறப்பாக இயங்கி மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்று வெற்றிவாகை சூடி வருகின்றனர்.

இவரின் கனவுகளில் ஒன்றான திறந்த வெளியரங்கும் சுப்பையா உடையார் வழித்தோன்றல்களில் அனுசரணையுடன் விளையாட்டு மைதானத்தின் தென்மேற்கு மூலையில் அமைக்கப் பட்டு பயன்பாட்டிற்கு ஆயத்தநிலையிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பொன்மலர். இராஜேஸ்வரன் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும் விக்ரோறியாக் கல்லூரி பற்றிய நினைவுடனேயே இருந்தார். இரு மாதங்களுக்கு முன்னர் இவரின் அருமைத் தம்பதியாகிய திரு. த. அழகராசாவும் அவர்தம் குடும்பத்தினரும் ஊருக்கு வந்திருந்த போது அவர்களுடன் என்னையும் அழைத்துக் கொண்டு விக்ரோறியாக் கல்லூரிக்கு சென்றிருந்தார். புதிய விளையாட்டு மைதானம் நிர்மாண நிலையிலிருந்த திறந்த வெளியரங்கு யாவற்றையும் பார்வையிட்டு, தனது எண்ணங்கள் நிறைவுற்ற மகிழ்ச்சியிலிருந்தார். கல்லூரி அலுவலகத்திற்கும் சென்று அதிபர், சில ஆசிரியர்கள், சில மாணவர்கள் என்போருடன் அளவளாவிச் சென்றிருந்தார். தனது கல்லூரியைத் தரிசித்து விடைபெற்றுக்கொண்டார் போலும்.

இவை மட்டுமல்லாது மூளாய் கிராமத்தின் மாதர் சங்கத்தில் முன்பள்ளியொன்றை ஸ்தாபித்து நடாத்தி வந்தார். பாடசாலை விட்டு விலகிய சராசரி மாணவர்களுக்கு முன்பள்ளி ஆசிரிய பயிற்சியும் வழங்கினார்.

முன்பள்ளிக் கல்வி பற்றிய அறிவு குறைந்திருந்த அக்கால கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தை சமூகத்திற்கு உணர்த்தியவர். இவரது முன்பள்ளி மாதிரி முன்பள்ளியாகத் (Model Nursary) துலங்கியமையை நாம் அறிவோம்.

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திற்குமான நிறுவனத்தின் (INS) இயக்குனராகச் செயற்பட்டவர். பாடசாலை விட்டு விலகிய பெண்களுக்கு உள்ளூர் மூலப்பொருட்களிலிருந்து உணவுப் பதார்த்தங்கள் உற்பத்தி செய்தல், உணவு பதனிடல் போன்ற பயிற்சிகளையும், தொழில் வாய்ப்பையையும் வழங்கியதோடு, சமூகத்திற்கும் உள்ளூர் உற்பத்திகளின் பயன்பாடுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்வதில் விருப்பும், அதன் பலனாக மனத்திருப்தியுமே அவரின் அதீத குறிக்கோளாக இருந்தன. தனக்காக மட்டுமன்றி, சமூகத்திற்காக உச்சளவில் உழைத்தல் போன்ற பலரிடத்தில் காண்பதற்கரிய பண்புகள் இவரிடம் நிறைந்திருந்தன.

இவருடைய சேவையினால் பயனடைந்த மக்கள், மாணவர்கள் இவரை நன்றியுணர்வுர்வோடு நினைவு கூருகின்றனர். அன்னார் இறைவன் திருவடியில் பேரின்பப் பேறு பெற பிரார்த்திப்பதுடன் இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிக்க ஆண்டவனை வேண்டுகின்றேன்.

**திருமதி. அ. வேலுப்பிள்ளை**
ஓய்வு நிலை அதிபர்
யா/ விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மலரின் நினைவுக் குறிப்பு

பொன்மலரோடு பழகிய நாட்கள் அற்புதமானவை. சமூகப்பணிகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். அவரது பணிகள் பன்முகப்பட்டவை. ஆரம்பத்தில் மொன்ரிசூரி பயிற்சியில் அனுபவம் பெற்ற நெறியாள்கையில் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிலையத்தினூடாகப் பல முன்பள்ளி ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை அவரையே சாரும். ஆயினும், அப்பயிற்சி நிலையம் செயற்பட முடியாது போன காலகட்டத்தில், மனம் தளராது, தனது சமூகப்பணிகளை வேறு தளத்தில் எடுத்துச்சென்றவர்.

பால்நிலைக்கல்வி அபிவிருத்திக்கான நிலையம் என்ற நிறுவனத்தை உருவாக்கி பெண்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றி யவர். இக்காலகட்டத்தில், ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனத்தோடு இணைந்து பணியாற்றுவதற்குக் கிடைத்த வாய்ப்பு அவரை மேலும் ஒருபடி உயர்த்தியது.

அந் நிறுவனத்தின் பணிகளோடு இணைந்த அவரது சேவை யாழ் மாவட்டத்தின் ஒவ்வொரு குக்கிராமங்களிலும் அவரைக் கால் பதிக்க வைத்தது. மேலும் பெண்கள் கிராமிய ரீதியில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்கி, இளம் பெண்கள் வருவாய் தேடக் கூடிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியவர். எத்தனையோ கண்காட்சிகளில் அவரது உற்பத்தியாளர்களது உள்ளூர் உணவுப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டமை மட்டுமன்றி விற்பனை யாகியதும் இன்னும் பசுமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மலர் மாநாடுகளிலோ அன்றி எந்த உயர் மட்டக் குழுவினர் சந்திப்புகளிலோ தனது கருத்தை ஆணித்தரமாகக் கூறும் வல்லமை கொண்டவர். தனது கணவர் இராஜேஸ்வரன் இறப்பின் பின் மனம் சோர்வடைந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட ஓர் சமூக சேவகி. அவரது ஸ்தூல சரீரம் மறைந்தாலும், அவரது பணிகள் சமூகத்தில் என்றும் அவரை நினைவு கூறும். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

**சரோஜா சிவச்சந்திரன்**
பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Ponmalar Acca.**

I fondly remember Mrs.Rajeswaran - Ponmalar Acca as "Pond's Acca". They were our neighbors in Kandy in 1967. My Mother and sisters quickly became great friends with Ponmalar acca .. a relationship that endured the years even when separated by oceans and great distances.

Acca was a very cheerful and energetic person and a fantastic chef and culinary expert. I remember her tutoring my younger sister and brother helping them with their homework and various school projects. Acca and Mr.Rajeswaran were extremely generous, helpful and were always there for our family in the forefront at every family function.

Acca went to touch the lives of many thousands of people through her work with NGOs in Jaffna. Her tireless efforts in making the lives of the displaced people a little bit easier with aid, healthcare and food supplies during a very difficult time in the history of Ceylon is admirable.

Acca will be fondly remembered for generations to come. Her life and her magnanimous, benevolent service to the Tamil citizenry in the time of need and after will be a true legacy. She will always live in our hearts.

With respect,
S.Pradeepan,
USA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி – 04

**உறவினர்கள்**

**1.** Pasumpon Mani (Malasiya) *43*

**2.** Dr. (Mrs) Thas (U.K)

**பெண்ணின் பெருமையைப் போற்றப் பாடுபட்டவர்**

**3.** Mr. K. Neelakandan

**பெண்குலத்தின் பெருமை**

**4. செ. சிவப்பிரகாசம் குடும்பம்**

**5.** Prediction on Ponmalar acca

Vratharajah Ramanan (U.K)

**6**. Mrs. Bahiathy Jereshuran Raseswaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From Malaysia:

Dear Ramar, Rasa and Pavalam,

Kindly accept my heartfelt condolences. May God bless Archi with eternal peace and guide her thru the astral world to attain final rest at the abode of the creator may God grant all of you peace, solace and strength to accept the loss of your dear sis a lovely person, my prayers are with you all. Pray funeral goes on well God bless,

Take care,

Pasumpon Mami.

Dear Ramar and all at home,

So sad to receive this news, our heartfelt sympathies and condolences on the passing away of our beloved Ponmalar, let her soul rest in peace, May the Almighty God give you all the strength to accept this great loss,

Take care and God Bless.

Thiraviyam Mami

Our deepest condolences Annai.

Hari & Rubini

Dear Ramar,

The last time I meet Ponmalar in 2011

she was he joyful and bubbly self. What happened to her.

Love,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Ramar,

Thank you for the opportunity to write something about Ponmalar, who was always Archi to uncle and me. I can never remember referring to her as Ponmalar while addressing her directly, or referring to her as Ponmalar, whilst talking in conversation. Uncle and I got to know her mostly in Kandy and though we did not have much contact in the subsequent years, I would hear about, and marvel at the work she was doing with the aid agencies in the North, during those troubled times.

We never had much of a chance to converse properly, about events of those in between years until I called her soon after her husband passed away, to offer our condolences. I happened to be in Colombo at the time, and we went through so many things, about her husband's illness, his passing and other events. Her main concern was how she was going to carry on her work, after her husband's passing and she was passionate about wanting to train some youngsters to continue with her work. Her concern she confessed was always there but what struck a chord, was the encouragement you had given her, that she should not be held back because she was a woman and she said you had sited the Queen of England, and what she had achieved, and many other women who had made it in a man's world. We had a good laugh that 'YOU had chosen the Queen of England as an example, as time was passing on the long distance call which had lasted for nearly an hour, we agreed to continue the conversation later but it never happened, another lesson "don't put off for a later day, what you can complete now".

When I heard that she had a stroke, I was truly saddened, and later perhaps I felt it was a merciful release for her to go, as her work here was done, perhaps that was not such a surprise too. All too often we don't let people around us know how much they are appreciated until they are gone.

So I will finish with the fall., quote from' Khalil Gibran' "And there are those who give, and know not pain in giving, nor do they seek joy, nor give with mindfulness of virtue; Through the hands of such as these God speaks, and from behind their eyes He smiles upon the earth".

With Love from Uncle and myself,
Kunju aunty, UK.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் பொன்மலர் அக்கா

பொன்மலர் அக்கா இன்று எங்களின் மத்தியில் இல்லை என்று எண்ணவே வேதனையாக இருக்கிறது.

பொன்மலர் அக்காவின் தம்பியை என் தங்கை கரம் பிடித்த காலம் தொட்டு இராஜேஸ்வரன் அண்ணாவும் பொன்மலா அக்காவும் என்னுடனும் என் குடும்பத்துடனும் மிகவும் நெருங்கியவர்களாக நான்கு தசாப்தங்களாகப் பழகியவர்கள். என் தங்கையின் குடும்பம் வெளிநாடு சென்றதும் இராஜேஸ்வரன் அண்ணா பொன்மலர் அக்கா வெளிநாட்டில் தங்கிய காலத்தில் கொழும்பிற்கு வரும்போது எங்களுடன் தங்கியதும் அந்த உறவை வளர்த்தது. தங்கையின் குடும்பம் வெளிநாட்டில் இருந்த காலகட்டத்தில் மூளாயில் மைத்துனர் குடும்பத்தின் அங்கத்தவர் களாகவே நாங்கள் கருதப்பட்டோம். யாழ்ப்பாணத்தில் சமூகப் பணிகள் ஆரம்பித்தபின்பும் அப்பணிகள் சம்பந்தமாக குறிப்பாக கம்பனிகளை நிறுவுவதில் என்னுடன் அடிக்கடி இராஜேஸ்வரன் அண்ணா பொன்மலர் அக்கா தம்பதியினர் தொடர்பு வைத்திருந்தனர்.

2014இல் - ஆடி அமாவாசை அன்று கீரிமலையில் நீத்தார் நினைவு நிகழ்வை நிறைவுசெய்த பின் நானும் என் மனைவியும் பொன்மலர் அக்காவை வைத்தியசாலையில் இறுதியாகச் சந்தித்தோம். இராஜேஸ்வரன் அண்ணா மறைந்தபின் மிகவும் அவர் மனம் நொந்துபோய் இருந்தார். அப்போது அவர் பட்டுப்போகும் மரமாகவே எனக்குப்பட்டார். பூத்துக்குலுங்கிக் காய்த்த மரமாக பல ஆண்டுகளாக அவரைக் கண்ட எனக்கு, அவரின் அந்நிலை மிகவும் வேதனையைத் தந்தது.

பொன்மலர் அக்காவின் சிந்தனைகளையும், குணாதிசயங் களையும் அறிகின்ற சந்தர்ப்பங்கள் பல எனக்குக்கிடைத்தன. அதே அடிப்படையில் பன்முக ஆளுமைமிக்க தாய்குலத்திற்காக துடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புனித உள்ளத்தின் செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் சில கோணங்களிலிருந்து பார்த்து நினைவுகூறி, அவரின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்க இந்தக் கட்டுரையில் முயன்றிருக்கின்றேன்.

**மனையாட்சி**

"மனையாட்சி என்பது பெண்களுக்கு அமைய வேண்டிய தனிப்பண்பு. நல்லதொரு மனையாள் வாய்க்கப்பெறின், "வீட்டில் இல்லாதது ஒன்றும் இல்லை" என்று பெருமிதமாகப் பேசுகிறார் வள்ளுவர். பெண்ணின் பெருமைக்கு வேறு சான்றுகளே தேவை யில்லை. இயற்கையும் அவளுக்கு ஏவல் செய்யும் என்பது வள்ளுவருடைய கருத்து." என்று எழுதியிருக்கிறார் தெய்வத் திரு மகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள். அந்த மனையாட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய பெருமைக்குரியவர் பொன்மலர் அக்கா. மனையாட்சியில் இரா ஜேஸ்வரன்அண்ணாவுடன் இணைந்த உன்னத இல்லத்தரசியாகப் பொன்மலர் அக்கா விளங்கினார்.

**மாநிலம் பயனுற வாழ்வதற்கே**

"வல்லமை தாராயோ பராசக்தி
இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே"

எனப் பராசக்தியிடம் விண்ணப்பம் செய்து மகாகவி பாடியிருக் கின்றான். நாளாந்தம் பொன்மலர் அக்காவின் பிரார்த்தனையும் அதுவாகவே இருந்தது. இந்த மாநிலம் பயனுற வாழ வாழ்வதற்கே என ஒவ்வொரு நாடியும் யாழ்மண்ணில் துடித்துக்கொண்டிருந்த அருமையான யாழ் மண்ணின் புதல்வி அவர். அந்தப் பூமியில் வாழ்ந்தவர்களை வாழவைக்க என்றும் ஆவலுடன் பணியாற்றிய ஓர் அன்பு உள்ளம் அவர்.

**பெண்ணின் பெருமையைப் போற்றிப் பாடுபட்டவர்**

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா
மங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாடிய வரிகள் பொன் மலர் அக்காவின் வாழ்க்கைத் துடிப்பாகப் பிரதிபலித்தன என்றால் மிகையாகாது.

“வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் - என்ற
விந்தைமனிதர் தலைகவிழ்ந்தார்
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்று
எண்ணிஇருந்தவர் மாண்டுவிட்டார்”

பெண்மையைப் பெருமைப்படுத்த பொங்கி எழுந்த பாரதியாரின் வார்த்தைகளில் பொன்மலர் அக்காவின் உணர்வுகளைக் கண்டோம்.

**எண்ணிய முடிதல் வேண்டும்**

“எண்ணியமுடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணியநெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்.“

பராசக்தியை நோக்கி மகாகவிபாரதி விடுத்த இந்த விண்ணப்பமும் பொன்மலர் அக்காவின் எண்ணத்தில் என்றும் எதிரொலித்தது. தான் நினைத்தவற்றைச் சாதிக்க வேண்டும் என உத்வேகமாகச் சுழன்றுவந்த “பம்பரம்“ அவர். அவரின் ஆளுமைத்திறனைக் கண்டு பலர் பாராட்டியதையும் நான் அறிவேன்.

**தருமத்திற்கான போராட்டம்**

எங்கள் தாய்குலத்திற்கு கடந்த மூன்று தசாப்தங்களில் இழைக்கப் பட்டு வந்த கொடுமைகளைக் கண்டும் கேட்டும் குமுறி எழுந்தவர் எங்களின் பொன்மலர் அக்கா.

“தருமத்திற்கு இச்செய்கை பொருந்துமா“? என நீதிகேட்ட திரௌபதையின் மனக்குமுறலை பாட்டுக்கொரு புலவன் இந்த வரிகளில் தந்தான்:

“பேயரசு செய்தால், பிணந்தின்னும்
சாத்திரங்கள்
பெண்டிர் தமையுடையீர்! பெண்களுட
பிறந்தீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பாவ மன்றோ? பெரியவசை
கொள்வீரோ?"

நாட்டில் நடந்தவை தருமத்துக்குப் பொருந்துமா என பொன்மலர் அக்காவிடம் பொங்கி எழுந்த ஆதங்கமாக இருந்தது.

**கல்வி**

"மனித மேம்பாடுகளை மலரச் செய்வது கல்வி" என விவேகானந்தர் போதித்தது போன்று யாழ் மண்ணில் வாழும் இளம் சமுதாயத்தின் கல்வி மேம்பட வேண்டும் என ஆர்வத்துடன் அளப்பரிய பணிகள் ஆற்றிய பெருமைக்குரிய மங்கையர் திலகம் இவர். வயது முதிர்ந்த காலத்திலும் தானும் மாணவியாக பாலர் கல்விப்பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். இது அவரின் அகங்காரமற்ற தன்நிலையைச் சரியாக உணர்ந்து தன்னையே மேம்படுத்தும் ஓர் உன்னத - உத்தம பண்பைக் காட்டுகின்றது. பாலர் பாடசாலைகள் மூலம் இளம் சிறார்களை பக்குவப்படுத்த வேண்டும் என அயராது உழைத்த இவர் யாழ் மண்ணின் இன்றியமையாத முதலீடு கல்விச் செல்வம் என்பதனை எம்மவர் அறிந்து வைக்கவும் பாடுபட்டார்.

அவர் ஓரிடத்தில் பின்வருமாறு தன் உள்ளக்கிடக்கையை கொட்டியிருக்கிறார்:

"உலகமயமாதலில் அறிவை மேம்படுத்துவதற்குப் பலவித சாதனங்கள்மூலம் தகவல் தொழில்நுட்பங்கள் பெறக்கூடியதான வசதிகள் காணப்படுகின்றன. இப்படியான பலவித சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தும் பூரணமான திருப்தியான வாழ்க்கை வாழ முடியாதவர்களாகப் பல குறைபாடுகளுடன் எமது சமூகம் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது."

ஜனாதிபதி சட்டத்தரணி கனகநாயகம் கனக ஈஸ்வரனும் நானும் புலமைச் சொத்துச் சட்டம் சம்பந்தமான கருத்தரங்கை நடத்த யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தோம். அக்கருத்தரங்குகளில் உற்சாகத்துடன் பங்குபற்றி கேள்விகளும் கேட்ட புலமைச்சொத்துச் சட்ட நுணுக்கங்களை அறிந்த அவரின் ஆர்வமும் திறமையும் இன்றும் என் மனதில் பசுமையான நினைவலைகளாக ஓடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவற்றையெல்லாம் எங்கடை ஆட்கள் படித்தறிய வேண்டும். இப்படியான கருத்தரங்குகளை மேலும் நடத்துங்கள்" என்றும் சொல்லிவைத்தார்.

**சிந்திக்க வேண்டியவை**

பொன்மலர் அக்கா வலியுறுத்திய இன்னும் ஒரு முக்கியமான விடயத்தை அவரின் வார்த்தைகளில் ஈண்டு தருகின்றேன்:

"சிறுவன் ஓர் உருவாக்கி, அவனுக்குச் சரியான உதவி, சுற்றாடல் பெறக் கூடியதாயிருந்தால் ஒரு நல்ல உறுதியான மனிதனை அவனால் உருவாக்க முடியும். இவையெல்லாவற்றிற்கும் அத்திவார மிடும் நேரம் வருகிறது. இதைச் சரிவரச் சரியான சமயத்தில் உரிய வயதில் செய்யாவிட்டால் இதுதான் வாழ்க்கையின் வளர்ச்சிக்குப் பெரிய தடையாகும்."

அந்தச் சிந்தனையின் உருவமாகவே சிறுவர் முன்பள்ளிகளை உருவாக்குவதில் அவர் தீவிரமாக கடமையாற்றினார் என்பதனை அவரின் வார்த்தைகளில் காண்கின்றோம்:

"சமூகத்திலுள்ள சகல சிறுவர்களுக்கும் அவரவருக்குள்ள திடமான சக்தியையும் திறமையையும் வளர்த்தெடுப்பதற்குரிய சந்தர்ப்பங் களை முன்பள்ளிகளில் மட்டுமல்ல வீடுகளிலும் கிடைக்க வழிவகுப் பதற்கு மாதர் சங்கத்தின் சிறுவர் பாடசாலைக்குப் பெற்றோர ஆசிரியர்சங்கம் 1986ஆம் ஆண்டு மாசி மாதம் சங்கம் உருவாகியது."

பாரிய இடம் பெயர்வுகள் ஏற்பட்ட காலத்திலும் பிள்ளைகளுக்கு முன்பள்ளிக் கல்வியை வழங்க ஒழுங்கு செய்ய அமரர் செய்த சேவைகள் யாழ் மண்ணில் கடந்த மூன்று தசாப்த வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

இச் சிறுவர்களுக்கான விசேட கவனிப்பு கொடுப்பதற்கு ஆசிரியர் களுக்குப் பயிற்சியும் தாய்மார்களுக்கு வெவ்வேறு சமூகம் வெவ் வேறு இடத்திலுள்ளவர்கள் ஒன்றாக இணைந்து செயல்படுவதற் கான விழிப்புணர்வையும் ஏற்படுத்திய தாய்க்குலத்தின் தலைவி பொன்மலர் அக்கா என்றுகூடக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளாதார அபிவிருத்தி**

தாய்மார்களையும் குறிப்பாகப் போர் சூழலில் குடும்பத் தலைமை களைப் பொறுப்பேற்க நேரிட்ட தாய்மார்களையும் பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபடுத்தவும் திட்டங்கள் தீட்டிப்பாடுபட்டவர். சிறு கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் விருத்தித்திட்டங்களைத் தீட்டி செயற்பட துடித்தார். ஆனால் அவருக்குப் போதிய ஆதரவு கிடைக்காதது கவலைக்குரிய விடயம்.

**சமுகநலன்**

சமூக நலனில் வளர்ச்சி பெறுவதற்கு இணைப்புக்கள், தொடர்பு களுடன் பலம் வாய்ந்த கட்டமைப்பினையுடைய முன்பள்ளி சமுகம் பொருளாதார நலனிலும் மேம்பட வேண்டும் என்ற நோக்கில் **சங்கமம்** நிறுவனத்தை நிறுவினார். நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் கணவரை இழந்த வேதனைமிகு சோதனைக் காலத்தி லும் சங்கமத்தின் சிந்தனையில் வாழ்ந்தவர், "இன்னும் தொண்டாற்ற வேண்டும்" என்று துடித்தவர், இன்று அவரே சங்கமமாகி விட்டார்.

**நிரப்ப முடியாத வெற்றிகள்**

அவரின் இழப்பு வடபுலத்திற்குப் பேரிழப்பு தாய்க்குலத்திற்கு ஈடுசெய்ய முடியாத நஸ்டம். யார் அதனை நிரப்பப் போகிறார்கள்? என்ற கவலைமிகு வினாவுடன் இக்கட்டுரையை நிறைவு செய்கின் றேன். அவரின் நினைவாக அவர் காட்டிய வழியில் சமுகப் பணி களை முன் எடுத்துச் செல்ல அவரை நேசித்த எல்லோரும் முன்வரு வதே அவருக்கு நாங்கள் செய்யும் சிறந்த அஞ்சலி. பொன்னான பொன்மலர் அக்காவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றேன்.

அன்பின் தம்பி,
**கந்தையா நீலகண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் குலத்தின் பெருமை

பெண் குலத்தின் பெருமை, சமுகப் பொறுப்பில் அடி பதிக்கும் போது , தாய்க்குல மாண்புடன் மலரும், இல்லத்தரசி அல்லது இல்லத்தலைவி எனப் பொருள்படும். "மனைவி" என்னும் மாண்புமிகு படியாக மிளிர்கிறது.

இல்லத்தையும் இல்லம் சார்ந்த பணிகளையும், சோர்வகற்றி, நீங்காத சுறுசுறுப்புடன், உற்றார், உறவினர், சுற்றத்தார் ஊரவர் எல்லோரையும் மனித மாண்புடனும் இன்முகத்துடனும் அரவணைத்து வாழ்ந்த அன்னைக்கும்,

பொறுமை, நிதானம், வாய்மை, பொதுநலம், புன்சிரிப்பு, அன்பு ஆகிய பல அணிகலங்களுடன், அரசசேவை, பொதுப்பணி என்பவற்றை அனைவரும் இன்புற அழகுடன் ஆற்றி இல்லக் கடமைகள் தவறாது உற்றார் உறவினர்க்கு உதவி, ஆடம்பரமற்ற அழகுச்சிறப்புடனும் தெய்வீகப்பொலிவுடனும் ஒளி வீசிய தந்தைக்கும்,

தலைப்பிள்ளையாக சக்தியின் உருவமாக , மண்ணில் வந்துதித்த தெய்வமகள் பொன்மலர், மனம், வாக்கு, காயம் மூன்றிற்கும் ஏற்ற நாமத்தை தாங்கி, தனது பெற்றோர், உடன்பிறப்புக்கள், உறவினர், ஊரவர் அனைவரும் மகிழ,

கைமாறு கருதாது வாழ்ந்தமையையும், திருமணம் முடித்து கணவருடன் வாழ்ந்த போது சென்றவிடமெல்லாம் மென்மை, பொறுமை, புன்சிரிப்பு, நிதானம் நற்பணி மூலம் எல்லோர் மத்தியிலும் உதாரணப் பெண்ணாக மிளிர்ந்த நிலையையும்;

நாடு கடந்து கணவருடன் வாழ்ந்த போது, பொதுநலனே நோக்காக, சென்றவிடத்து மக்களையும் உடன்பிறப்புகளாக அணுகி, பணிகள் பல ஆற்றிச் சிறப்பு அடைந்தமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த ஊர் திரும்பிய பின் தான் பெற்ற பயிற்சி அறிவு , அனுபவங்களை ஒன்று சேர்த்து, பொதுப்பணியில் கால் பதித்து சுக துக்கம் பாராமல் அனைவர்க்கும் உதவி, வேலையற்ற பல பெண் பிள்ளைகளுக்கு வாழ வழி காட்டிய பெருமையையும்

கணவனை இழந்து தவித்த குறுகிய காலப்பகுதியில் உடன்பிறப்புகளின் அரவணைப்பில் அமைதியாக வாழ்ந்த உயரிய வாழ்க்கையும் அற்புதம் அற்புதம் அற்புதம்.

09.08.2015 விடியற்காலை கொழும்பிலிருந்து சென்று யாழ் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சில நாட்கள் உறக் கத்தில் இவ்வுலக வாழ்க்கையை முடிக்கு முன் ஐந்தொகைக்கணக்கை அமைதியுடன் முடித்த அன்புள்ளம் எம்மைத் தடுமாற வைத்தது, கலங்கிய கண்களுடன் மானசீக விடைபெற்று திரும்பியபின், 16.08.15 தன்பணி முடித்து மறைந்து சென்ற செய்தி பேரிடியாக வாட்டியது.

இறைவா, எங்கள் பேரன்புக்கும் தங்கள் பக்திக்கும் உரித் தான அவ் ஆன்மாவை உன் திருப்பாத திருப்பணிக்காக நிரந்தரமாக ஏற்று ஆசீர்வதித்து இப்புனித உறவின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் அமைதியையும் ஆறுதலையும் அளிக்க வேண்டி பணிந்து வணங்குகின்றோம்.

அன்புடன்
**செ.சிவப்பிரகாசம்,**
**இரத்தினாம்பிகை குடும்பமும்.**

**பா.சிவகுமார்**
**கோமதி ஹரன் குடும்பமும்**
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPRECIATION ON PONMALAR ACCA

Few words about a lady, my relative, my advisor and my role model. Ponmalar acca is the person of inspiration for many people for many years . Although I lived in Tholpuram when she was starting many village level projects , I COULDN'T then understand or follow her work. We met first time back in 2003 after many years gap and only then I understood her eagerness for micro economic projects, entrepreneurship, gender equality, education especially for the young kids and healthcare.

When I met her back in June 2015 in Moola , I knew that was our last meeting and I visited her couple of times and she was very happy to discuss the ideas of mine are taking shape as projects ONLY one thing she asked me to do was to PLEASE WORK WITH YOUNG PEOPLE.

I am blessed to know this remarkable lady who touched me so much with her encouragement, advise and willingness to go the extra mile to support my thinking .I can promise her soul one thing, the time, thoughts and energy she invested on me wont be wasted. We will start our work in our villages (Tholpuram, Moolai, Chulipuram, Nelliyan and Pannakam) on the 03/05/2016 on her birthday by the Anandha trust which was started on 23/08/2015 in uk by our supporters.

We will work on education,entrepreneurship, environment, healthcare and support IN those specified villages and we all should work together with local, national and international players make our area to become self sufficient in those 5 categories and we will create model of prototype too.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I would take this opportunity to thank GOD for giving a noble soul and person and I know from the bottom of my heart that SHE is in a safe and secure place and blessing us .BUT are we living our lives according to her guidance, encouragement and wishes ?

ONLY THE TIME WILL TELL. But we must MAKE a resolution in our life that we do some actions to make small difference to our lives and others like our beloved Ponmalar acca did. May her great soul rest in peace and may her great thoughts, words and action live THROGUH US.

Thanking you with love ,respect,peace ,humility and prayers.

Love all serve all, all is ONE

**Varatharajah Ramanan**
*(raj ramanan)*
*co founder of myairportvillage concept*
*and co founder of anandha trust*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# She was not an Ordinary Woman, but an Agent of Social Change!

I came to know Ponmalar Aunty better only after the passing away of her beloved husband Rajeshwaran uncle in 2014, although I had known her from early childhood. My association and interest in her increased when my husband formed a friendship with her as she shared many similar interests to his. He brought many interesting stories about her almost every week which were a revelation to me about her character and depth.

Before my husband, my father too had similarly valued and admired her. I recall my fresh memories of exhibitions in Jaffna which my beloved father often took us to; one of the few stalls he spent long periods at was where she stood, capably displaying the many local products of Valikaamam West to be popularized and marketed. My father esteemed her as an agent of change at the grassroots and tried to instill in us, the same respect for what she did. She stood humble compared to other modern exhibitors but was very proud of what she displayed. She displayed different sorts of Palmyrah products as well as a variety of local health foods. She was a living icon of culture, teaching us by example how an ideal woman of our culture should and could be. As a key social figure for the Vali West area, I learnt from her not only about valuing our local products, but also how a woman in our culture can be an agent for' good change'.

Her foreign exposure in Nigeria enriched our local community in many ways. She introduced the model preschool and even trained many more local women as Preschool teachers. She often



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

reminded me of the famous iconic activist Vandana Shiva of India; born into a traditional family while maintaining her family'S decorum and her own respectability,yet managed to stretch her social boundaries. She was the trustee owner for the Moolai Murugan temple, a rare feat for a woman of Jaffna, especially of her era to have achieved.

Her household arrangements are a very good example for all of us to follow; the epitome of an economic and ecological model which is sustainable and self-reliant. A Solar panel was installed, saline water had a Reverse Osmosis filter, ecological waste was separated and goes back to the ground as good fertilizer to enrich the soil, rain water is harvested in a tank and connected to the main pipeline to the house to be used etc.

She lately aspired to spread Hinduism scientifically. The magnetic charisma she radiated earned her goodwill and admiration wherever she went and with whomever she came in contact. Above all, she was the bridge to reconnect our relationship bond for which I am grateful. I somehow had a precognition that she might pass away soon and so was inspired by the Grace of God to praise her in my monthly visit, for how much she had done to advance our society.

Much more can be added to this list. My whole family will miss her so much! She is hard to replace in our lives but we will at least undertake to follow where she lead, by the worthy footprints she has left behind.

**Mrs.Bahirathy Jeeweshwara Rasanen,**
**Moolai Central,**
**Chulipuram.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி – 05

**குடும்பத்தினர்**

1. Our Beloved Acca
Thamby Ramar
2. Memorier of our Ponmalar
Mr. C.Canagarajar (USA)
3. **சாய்ந்து போனதே சந்தன மரம்**
**திருமதி மகாராணி யோகலிங்கம் (கனடா)**
4. In Loving memory of our Periyamma
Anusha, Kanitha and Krishna (USA)
5. The Pillar of Our family
Nilani (Sydrey, Australia)
6. Periyamani we miss you!
Kalani (columbo)
7. Periamami - A woman of substance
Sanju (UK)
8. Our Periyamami
archana (Sinthu) Canada
9. To my dearest Periya mami
Anenthan Alagarajah (Raji) Canada
10. God saw you getting tired
grandson utheshan (UK)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Our beloved Acca










*Acca was seeking HIM not in the temple, but discovered HIS presence in the smiles of the children and the tears of the stricken. It was that motivated her to serve the community at large who were destroyed by the civil war. She has left us now, but will always be in our memory as the beloved Acca*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Beloved Acca the Golden Flower

## Childhood



Acca after seventy years of full life was confined to bed for over a year and breathed her last on 16 August 2015. She was the eldest in our family, born on 3 May 1943 and named Ponmalar (fondly called Archi) after grandmother Ponnarchippillai,was two years my senior. We grew together in our family house in Moolai till 1952 and both went to Moolai Saiva Pragasa Vidyasalai for primary education. Thereafter from 1953 to 1955 Acca and I moved with Appu (father) to live in Chulipuram at the Post Office quarters, where Acca started her secondary education at Victoria College and topped her class. I was admitted to Chulipuram Aikiya Sanga Saiva Vidyasalai to continue my primary education, where I too excelled as the top student, which prompted kunchi Appu (Uncle) to persuade Appu to send Acca and me to Colombo to pursue with our education.

## Teenage years



In 1956 Acca and I moved to Colombo to continue our education. Acca joined Colombo Ladies College while I went to Royal College. Fortunately for us our cousins were at the same respective schools and it did help a great deal. However Acca's stay in Colombo was short lived, within few months of her arrival, she attained age and Amma (mother) wanted herback in Jaffna to take care of her health in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the traditional manner. Acca returned to Moolai and later joined Jaffna Hindu Ladies College to continue her studies, where she excelled in studies and extracurricular activities. On completion of her schooling in 1965 marriage was arranged for Acca to Athan (Rajeswaran) a relative of Amma, who was then teaching at St. Sylvester's College, Kandy. As a student in Colombo, I remember making weekend trips by train to their house in Wattapuluwa Housing scheme, located near the banks of Mahaweli Ganga, where daily before lunch we took a dip in the river. Later I went UK for my higher studies and in 1973, Athan got transferred to Nelliady Central College, Jaffna which gave Acca the opportunity to live with Athan in the cottage house with a farm in Navindil given to her, which was Amma's dowry. That enabled them to spend few years of their married life mixing with Athan's and Amma's relatives. After graduation I was employed and living in UK, Acca with Athan in 1975 arranged my marriage to Kamala a close relative of Amma. Acca was tholi at our wedding and thereafter always cared for the welfare of our family.

**Living Overseas**

In 1978 Acca accompanied Athan to Lesotho, a landlocked country in southern Africa completely surrounded by South Africa. He



took up a teaching appointment at Mohaleys Hock Secondary School and on completion of that contract in 1980, they moved on to Daura part of Kaduna state in Nigeria, where Athan served for four years as a teacher on



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

contract at Daure Government Secondary School. It was here Acca's life took a turn from routine housewife to a teacher, as she started a preschool for the children of expatriate teachers of the school in the compound they were living. Athan and Acca visited us in England, where I was then living with my family. It gave for the first time Nilani and Kalani the opportunity to get to know their Perriyamama and Perriyamami.

**As Trustee and Manager of Murugan Kovil**



In 1985 on completion of his employment contract Athan returned to Sri Lanka with Acca. Then Acca completed a Montessori Teachers Training Course at Woodland Nursery Training School, Mt.Lavinia, before moving back to Moolai. On her return in 1986 Acca as trustee managed Moolai Sri Muthukumaraswamy Thevasthanam, called locally Murugan kovil. Acca ably assisted by Athan took some tough decisions as manager of the temple, much to the apprehension of the devotees. As per her personality she never feared taking drastic decisions which she thought was best for the temple. The temple management to her was more a part time activity as her time was mostly spent on social service activities to our community. She never failed to disseminate the thoughts of social responsibility on the devotees at the temple, many appreciated this and joined hand to assist with her on community service projects. True to the saying of Swami Chinmayanada - Acca was seeking HIM not in the temple she



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

managed - Sri Muthukumaraswamy Thevasthanam at Moolai, but diseavered HS presence in the smiles of the children and the tears of the stricken. It motivated her to serve the community at large who lives were destroyed during the civil war.

**Community Service**



களை ஏற்படுத்தும் வசதி வாய்ப்புக்களைப் பெற்ற தாய்மார்களுக்கும் (பெண்கள்) சமூக பொருளாதார முன்னேற்றம் அடையக்கூடிய தகைமைகளைப் பெறுவதற்கான பயிற்சித்திட்டங்கள் புதிய வழிமுறைகளுடன் நடாத்தப் பட்டதுடன் இச்செயற்பாடுகள் சமூகத்திற்குச் சென்றடைவதற்கான விழிப்புணர்ச்சிகள் நடாத்துவ தற்குத் தாய்மார்களுக்கும் அறிவூட்டும் செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் சகல சிறுவர்களுக்கும் குழந்தை மையமான கல்வியை சிறுவர் பாடசாலைகளுடன் நின்றுவிடாது வீட்டிலும் சமூகத்திலும் கிடைக்கும் வாய்ப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டது. சிறுவர்களூடாக மனித வளவிருத்தி, இயற்கையுடன் வாழ்க்கைமுறை இயற்கையைப் பேணிப்பாது காப்பதற்கும், நுண்கருநிதியம் ஆரம்பித்து நிதி வளத்தை சமூக மட்டத்தில் வளர்ப்பதன் மூலம் ஒரே குடைக்குக் கீழ் வழமையான யாழ்.குடாநாட்டின் சேமிப்புப் பழக்கமான முறைசார சீட்டு முறையை முறைசார்ந்த வங்கி முறையில் ஒழுங்கில் ஒழுங்குபடுத்து வதன் மூலம் இலகுவாகவும் விரைவாகவும் சகல மக்களும் தத்தமது இடங்களிலேயே கடன் வசதி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தும் பழக்கமும் அறிமுகம் செய்யப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் ஏற்கனவே விவசாயிகளினால் சமூக அமைப்பில் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் இந்த நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தி யிருந்தாலும் சிறுவர் கல்வி நுழைவாயிலாக இச்செயற்பாடானது சகல சமூகங்களுக்கும் சென்றடையும். வாய்ப்பினை ஏற்படுத்தியதன் மூலம் சமூக அபிவிருத்தியில் பொருளாதார மேம்பாட்டிற்கு ஆதாரமாக இந்நிதிவளம் பயன்படுத்தக்கூடிய வகையில் விழிப்புணர்ச்சிகள் ஏற்படுத்த முடிந்தது.

அந்தக் காலகட்டத்தில் போர்ச்சூழலில் பௌதிக வளமான கட்டிடங்கள் அமைக்கும் எண்ணம் குறைவாகவே இருந்தது. மரநிழலிலும் சிறுவர் கல்வியை கற்பிக்க வேண்டுமென்ற நோக்கம் மேலோங்கி இருந்தது. இதனால் வீட்டு விறாந்தைகள், சனசமூக நிலையச் கட்டிடங்கள் பத்திரிகைகள் வாசிக்கும் இடத்தில் காலை நேரங்களில் சிறுவர் கல்விக்குமாக ஒதுக்கி சிறுவர் பாடசாலை ஆசிரியர்களின் முழு முயற்சியினாலும் அர்ப்பணிப்பிலும் கல்வி வளர்ச்சி அடைந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பயிற்சிகள் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு யுனிசெவ் நிறுவனம் உதவியபோதும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவினர் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஐக்கியராச்சியத்தின் (Sc -U.K) நிதிஉதவியுடனும் அந்தக்காலத்தில் யாழ் மாவட்டத்தில் நிர்வாகித்த (John Goodhand) அதிகாரியின் பயிற்சி முறைகளின் என்ற முன்னேற்றத்திற்கு உதவியது. அரசசார்பற்ற நிறுவனம் என்றால் என்ன? என்ற பயிற்சிப்பட்டறையின் அறிமுகம் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய நிறுவனத்தை சுயமதீப்பீடு செய்ததன் விளைவு செயற்பாடுகளை முன்னேற்ற உதவிய யுனிசெவ் நிறுவனம் 1989ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரை சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயற்சி நிலையத்திற்கு நிதி உதவி வழங்கி யதுடன் நில்லாது அந்தக்காலத்தில் கொழும்பில் அதிகாரியாகத் தொழில் புரிந்த ஸ்கண்லன் (Scandlan) அமெரிக்காவைச் சேர்ந்த வடக்குக் கிழக்கும் பயிற்சியினை அறிமுகம் செய்வதற்கு சில வழிமுறைகளை வகுத்து உதவியது. குறிப்பிடதக்கது.

1. நடமாடும் சன்விச் (Mobile Scandwitch Course) பயிற்சி
2. பயிற்சி பெற்றவர்களுக்குள் பயிற்சி கொடுப்பதற்குத் தகைமையுடையவர்களைத் தெரிவு செய்து (Master Teachers) பயிற்சி கொடுப்பவர்களை உருவாக்கல் தகைமையுடன், மன மாற்றத்தை மக்களிடம் ஏற்படுத்தும் மனப்பாங்கும் உறுதியும், போர்க்காலத்தில் சகல இடங்களுக்கும் போய்த்தங்கும் துணிவு, வசதிகளற்ற பிரயாணங்கள், இருப்பிடம், உணவு போன்ற பலவகைப்பட்ட இடர்களைத் தாங்கி செயற்பட முன்வந்த அர்ப்பணிப்பு விலை கொடுத்து வாங்க முடியாத பெறுமதி வாய்ந்த பெண்களின் பங்களிப்பாகும்.
3. ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் அந்தந்த உதவி அரசாங்க அதிபரூடாகவே பயிற்சிகளுக்கு ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் விளைவு அந்தந்தப் பிரதேச ரீதியாகப் பயிற்சியாளர் கள் உருவாக்கப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்ற பயிற்சிகள் இவர்களூடாக யாழ்.மாவட்டம் முழுவதும் ஒரேமாதிரியாகப் பரவலாக்கம் செய்யக்கூடியதான வாய்ப்பினை ஏற்படுத்தியது. எது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும் இப்பயிற்சியினூடாக சகல மட்டங்களிலும் சமூகத்தில் பல வழிகளில் மாற்றம் ஏற்படுத்துவதற்குரிய வழிமுறைகளை அமைத்துத் தந்ததுடன் நில்லாது அவ்வவ்போது எமது அனுபவங்களைப் பகிர்வதற்கும், மற்றவர்களிடமிருந்து கற்பிக்கும் தேசிய மட்டம், (ஆசிய) பிராந்திய மட்டம், சர்வதேச மட்டங்களில் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தி னருக்கு அவ்வவ்போது சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தந்தவர். கலாநிதி.பொன்னா விக்னராஜா. தலைவர் (SAPNA) தென் ஆசிய தோற்ற வலைப்பின்னல் அமைப்பு, கொழும்பு நிறுவன வளர்ச்சிக்கு வரப்பிரசாதமாக இருந்ததுடன் சிறுவர் கல்வி நுழைவாயிலாக சமூக அபிவிருத்திக்கு ஓர் உந்துகோலாக அமைந்தது. வெற்றிகரமான சமூக தயாராக்கலைப் போர்க்காலத்தில் பல இடர்கள், தடைகள், சவால்களை எதிர்கொண்டு வடக்கு, கிழக்கு, புத்தளம், அநுராத புரத்திலும் நடைமுறைப்படுத்தக் கூடிய தகைமையைப் பெறுவதற்கு ஆதரவாக இருந்தவர். கலாநிதி பொன்னா விக்னராஜா ஆவர்,

இச் செயற்பாடுகள் சாதனை அடைந்தமைக்கு முக்கிய காரணம் சிறுவர் கல்வியில் ஈடுபட்டபெண்களின் அமைப்புக் களாகும். ஒவ்வொரு சிறுவர் பாடசாலை ஆசிரியர்களும் தத்தமது பாடசாலைகளில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் அமைத்தனர். பெற்றோரில் பங்குபற்றுபவர்களில் பெரும்பாலானோர் தாய்மார் களே, இதனால் சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள் கிராமங்களில் வலுப்பெற்றனர். அதேபோல உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக நடாத்தப்பட்ட பயிற்சியில் சகல இடங்களிலும் சிறுவர் பாடசாலை ஆசிரிய சங்கங்கள் உருவாக்கப்பட்டது. முதல் முதலாக 1987 ஆம் ஆண்டு சங்கானைப் பிரதேசத்தில் சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கம் உருவாகியது.

யாழ்.மாவட்டத்தில் சகல (15) பிரிவுகளிலும் அமைக்கப் பட்டது. இன்று வரை இச்சங்கம் முதன்மை நிலையில் நின்று பல செயற்பாடுகளைத் தொடர்ந்து நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிச் செயற்பட்டு வலுவடைவதற்குத் தொடர்ச்சியாக முறைமையான சமூக தயாராக்கல் பயிற்சிகள் பெற்றமை உதவியது. மாவட்ட ரீதியில் இச்சங்கங்களை இணைத்து சமாசமும் 1991ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சியின் மூலம் யாழ் மாவட்டத்திலுள்ள அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் புத்திஜீவிகள். பலகுழுக்கள், அரசியல்வாதிகள், கொடையாளிகள், கூட்டுறவு அமைப்புக்கள், சமய கலாசார அமைப்புக்கள் போன்ற சகலரையும் ஒன்றிணைந்த ஓர் சமூக அமைப்பாகத் தோன்றி அந்தந்தப் பிரிவுகளில் ஒன்றிணைத்த பல செயற்பாடுகளைச் செய்த சிறுவர் பாடசாலைச் சமூகம் 1995ஆம் ஆண்டு முன்பள்ளி கல்வி சமூகமாக முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையம் சகலரின் ஒத்துழைப்புடன் இணைப்புடனும் பெயர் மாற்றப்பட்டது. பாரிய இடப்பெயர்வு யாழ்.மாவட்டத்தில் 1995ஆம் ஆண்டு ஏற்பட்ட பொழுது சகல பிரதேச செயலர் பிரிவுகளிலுமுள்ள முன்பள்ளி சமூகங்களுடன் இணைந்து முழு மூச்சுடன் முன்பள்ளி ஆசிரியர்கள் செயற்பட்டன. நிவாரணம், புனர்வாழ்வுக்கு அப்பால் அபிவிருத்தி என்ற நோக்கில் தொழில் புரியப் பழக்கப்பட்டவர்கள். அர்ப்பணிப்புடன் சமூக மேம்பாட்டிற்குரிய பல செயற்திட்டங்கள் செய்து தம்மை வளர்த்துக்கொண்ட இப் பெண்களின் பங்களிப்பு முன்பள்ளிகளின் வளர்ச்சியுடன் மட்டுப்படுத்தப்படாமல் சமூகவளர்ச்சிக்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

சமூகவளம் முன்பள்ளி சமூகக் கட்டமைப்புப் பலமானதாகவும் சகல மட்டங்களில் இணைப்புக் கொண்டதாகவும் எதிர்கால சந்ததியினரின் அடித்தளமாகவும், பெண்களின் பங்கும் பொறுப்பும் உடையதாக அமைந்துள்ளது. சமூக தயாராக்கல் மூலம் மக்கள் விழிப்புணர்வு. உணர்வூட்டல் பொருத்தமான துறைகளில் இணைப்பு, போர் சூழலில் அவ்வவ்போது ஏற்படும் அரசியல் மாற்றங்களின் போதும் இசைவாக்கம் பெறும் முகாமைத்துவப் பண்புகளுடன் செயற்படும் இப் பெண்கள் சமூகத்தைப் பொருளாதார முன்னேற்றம் அடைய வைக்க வேண்டியது. அவசிய தேவையாக உள்ளது.

1999ஆம் ஆண்டு தொடக்கம் சங்கானை முன்பள்ளி ஆசிரியர் சங்கத்துடன் முன்பள்ளிக்கல்வி நுழைவாயிலாக சமூக நலன் திட்டங்கள் பல அமுல்படுத்திய பொழுது வினைத்திறனுடன் அமைநத் முன்பள்ளி ஆசிரியர்கள், தாய்மாரின் செயற்பாடுகள் சாதக விளைவுகளை ஏற்படுத்தியதை அவதானிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெண்களின் பங்களிப்புடன் நலிவுற்ற சமூகங்களின் ஜீவனோபாய மேம்பாட்டிற்கான திட்டங்கள் அமுல்படுத்தும் பொழுது நிலைபேறான அபிவிருத்திக்கு மைல்கல்லாக (Mile Stone) அமையும்.

ஆரம்பசுகாதாரம், ஆரோக்கியம், போசாக்கு, வீட்டுத்தோட்டம், வருமான அதிகரிப்பு, திட்டங்களை 36 முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியாளர் பயிற்சிகள், தாய்மார்களுக்கு கிராம மட்டத்தில் அதே விடயங்களில் பயிற்சியுடனா செய்முறைகள், அமுல் நடாத்தி அத் தாய்மார்கள் 500 பேர் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து, திட்டமிட்டு போசாக்கு உணவு உள்ளூர் உற்பத்தியில் மலிவாக விதம் விதமாக தயார்ப்படுத்தி 30 முன்பள்ளிகளிலும் தனித்தனியாகக் கண்காட்சிகள் மூலம் சமூகத்தினருக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினர். இவர்களில் 150 தாய்மார்கள் திறமையில் தெரிவு செய்யப்பட்டு கௌரவித்தமை முன்னோடிச் செயற்பாடாகும். இதன் விளைவாகத் தொடர்ந்தும் கண்காணிப்பினை முன்பள்ளி ஆசிரியர்கள் தத்தமது முன்பள்ளிகளில் நடைமுறைப்படுத்திய பொழுது சிறுவர்களுக்கு நாளாந்தம் போசாக்கான உணவை உள்ளூர் வளங்களில் தயாரித்து இடைவேளை உணவாக அனுப்பப்பட்டது. சுகாதார திணைக்களத்தின் தொடர் அளவீட்டில் போசாக்கு நிலை அவதானிக்கப்பட்ட பொழுது போசாக்கின்மை குறைவடைந்திருந்தது.

இச் செயற்பாடானது மூன்று வருட தொடர் திட்டம். தாய்மார் பிள்ளைகளுக்கு இக்கூட்டு முயற்சியின் நிர்ப்பந்தத்திற்காக வீட்டில் தினமும் போசாக்கான உணவினைத் தயாரித்த பொழுது வீட்டிலுள்ள சகலருக்கும் விசேட உள்ளூர் விளைபொருள் உணவு போசாக்காகக் கிடைத்துள்ளதுடன் உணர்வு பூர்வமான பழக்க மாற்றமும் ஏற்பட்டது. சிறுவர்களும் தமது உணர்வுப் பாத்திரத்தை பாடசாலையில் திறந்து ஆசிரியர் பார்வைக்கு வைக்கும் பொழுது இத்தரத்தில் கொண்டுவராத (Biscuit) போன்ற உணவுகளை சிறுவரும் ஒருவருக்கொருவர் அவதானித்து கண்காணித்து ஓர் கூட்டு முயற்சியாக வெற்றி அளித்தது.

2002 இல் மீண்டும் ஒரு பாரிய இடப்பெயர்வு யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட பொழுது சங்கானைப் பிரிவில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து குடியேறினார்கள். இக் குடும்பப் பிள்ளைகளுக்கு முன்பள்ளிக் கல்வியை உடனடியாக ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கம் முன்பள்ளிகளில் கிடைக்கும் ஒழுங்குகளை முன்பள்ளிச் சமூகம் மேற்கொண்டது. இச் செயற்பாடானது சகல இடம்பெயர்ந்த குடும்பச் சிறுவர்களுக்கும் உடனடியாகக் கல்வி வசதிகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் வழங்குவதற்கு உதவியாகவும் சங்காணை முன்பள்ளிக்கு உபகரண வசதியும் கிடைக்கும் வாய்ப்புடன் இச் சிறுவர்களுக்கான விசேட கவனிப்புக் கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் தாய்மார் களுக்கு வெவ்வேறு சமூகம் வெவ்வேறு இடத்திலுள்ள வர்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கான விழிப்புணர்வும் ஏற்படுத்த முடிந்தது. முன்பள்ளிச் சிறார்களுக்கும் சமூக உணர்வு உருவாகும் பருவத்தில் பலருடன் இணைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இவர்களுக்கு தற்காலிகத் தேவைக்குத் தனிப் பாடசாலை அமைத்து செலவு செய்ய வேண்டிய நிலைப்பாடு குறைக்கப்பட்டது. இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களுக்கு, இங்குள்ளவர் களின் நல் உறவுடன் திரும்பிச் சென்றனர்.

1) பாடசாலைக்கு செல்லாமல் இருப்பதும், இடைவிலகல் சமூகத்தில் அவதானிக்கப்பட்டு கட்டாயக் கல்விக்கான விழிப்புணர்ச்சிகள், சிறுவர்களையும், தாய்மார்களையும் இணைத்து முன்பள்ளியிலிருந்து அந்தந்தக் கிராமப்புற ஆரம்பப் பாடசாலைக்கு பாத யாத்திரை சுலோகங்களுடன் பதாதைகளைக் கொண்டு சென்றமை சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

2) மனசுகம் சம்பந்தமான சுலோகங்களுடன் முன்பள்ளி களிலிருந்து அந்தந்தக் கிராமப்புற பாடசாலைகளுக்கு தாய்மார்களும் சிறுவர்களும் பாத யாத்திரை சுலோகங் களுடன் செல்வதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் ஒழுங்கு செய்தனர்.

3) மெல்லக் கற்கும் மாணவர்கள் அதிகரித்த பொழுது விசேட பயிற்சிகள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களம், சாந்தியம், பல்கலைக்கழக மனோதத்துவ வைத்திய பிரிவினரால் நடாத்தப்பட்டு பின்நேர வகுப் புக்கள் இம் முன்பள்ளி ஆசிரியர்கள் கற்பிக்கும் முன்பள்ளி களுக்கு அண்மையில் உள்ள பாடசாலை சிறுவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்பட்டது. அத்துடன் அக் கிராமங்களில் விழிப்புணர்ச்சி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டது. இச் சிறுவர்களின் போசாக்கு நிலை சகாதாரத் திணைக் களத்துடன் இணைந்து நடாத்திய பொழுது மந்த போசாக் கும், மெல்லக் கற்பதற்குரிய காரணமாகக் கண்டு பிடிக்கப் பட்டது. அத்துடன் ஆய்வில் இம் மெல்லக் கற்கும் மாணவர்கள் முன்பள்ளிகளுக்குச் செல்லாததும் அறிய முடிந்ததும் சமூகத்தவருடன் சேர்ந்து செய்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

4) வருட தொடர் செயற்பாட்டில் போசாக்கு உணவு மெல்லக் கற்கும் மாணவர்களின் விசேட வகுப்பில் கொடுக்கப் பட்டது.

அநேக பாடசாலைகளில் மெல்லக் கற்போர் குறைந்தனர். இந்தச் செயற்பாட்டு ஆவணங்கள் சகல மட்டங்களிலும் பகிர்ந்ததன் விளைவு கொடையாளிகளை ஈர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. அதே சமயம் இத் திட்டத்திற்கான உதவிகள் யாழ் மாவட்டம் அடங்கலாக நடைமுறைப் படுத்துவதற்குக் கிடைத்த பொழுது சங்கானையில் பாடசாலைகள் தெரிவு செய்யும் பொழுது முன்பள்ளி ஆசிரியரும் அப் பாடசாலை பழைய மாணவியினால் முதல் முதலாக மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு செயற் பாட்டினை ஆரம்பித்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் மெல்லக் கற்கும் மாணவர்கள் இல்லாமற் போனது குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

5) சங்கானை பிரதேசத்தில் நலிவுற்ற குடும்பங்கள் அதிகம் வாழும் 21 குடும்பங்களை இனம்கண்டு இக் கிராமங்களை ஆய்வு கூடங்களாக வைத்து பங்குபற்றுதலுடனான செய்கை ஆய்வினை மேற்கொள்வதற்குரிய முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் தெரிவு செய்யப்பட்டு பங்குபற்றி னார்கள். கிராம மக்களின் வரலாறு தற்போதைய நிலை எதிர்கொள்ளும் பிரச்சினைகள், காரணங்கள், தேவைகள் எனப் பல விடயங்கள் மக்கள் பங்களிப்புடன் அறிந்து அவர்களுக்கே ஆவணமாக்கப்பட்டு வெளிப்படுத்திய போது அவர்களுக்குத் தம்மிடமுள்ள இயற்கை மனித வளங்கள் முன்னேற்றுவதற்குரிய வழிவகைகள் பலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனம் சந்தர்ப்பங்கள் தடை அவர்களாலேயே கண்டு பிடிக்கப்பட்டது. இந்த ஆய்வானது மக்களுடன் சேர்ந்து செய்யப்பட்டதன் விளைவு தாமே தம்மை அறிவதற்கு உதவியது. அதுமட்டுமல்ல தகவல்கள், கற்ற பாடங்கள் ஆவணப்படுத்தி சகல மட்டங்களுடனும் பகிரப்பட்டது. தேசிய மட்டத்தில் கொள்கை அமைத்தலுக்கும் உதவியது. சங்கானைப் பிரதேசத்தில் 04 பிரதேசசபை உபபிரிவு களிலும் தத்தமது கிராமங்களில் பெற்ற தகவல்களின் ஆவணங்கள் பிரதிபலிக்கக்கூடிய வகையில் கூட்டு முயற்சி யாக முன்பள்ளி ஆசிரியர் சங்கம் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்துடன் இணைந்து 04 கண் காட்சிகளைத் தாய்மாருடன் பல தகவல்களைப் பகிர்ந் தமை முன்பள்ளிகளின் வளர்ச்சியின் வெளிப்பாடாக இருந்தது. இச்சமூகத் தயாராக்கல் பயிற்சியின் இறுதிச் செயற்பாடாக இலங்கையின் சில மாவட்டங்களுக்கு சுற்றுலாச் சென்றமையாகும்.

தத்தமது கிராமங்களின் வாழ்க்கை முறைமைகளுடன் வாழ்ந்த இவ்வாசிரியர்கள் இடம்பெயர்வுகளில் நிவாரணப்பணி களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களை முழுமையாகப் பயன்படுத்தி தம்மையும் முன்பள்ளிகளையும் வளர்ச்சிக்குள்ளாக்கிய இப்பெண் கள் யாழ் மாவட்டத்தை விட்டு வெளியே போவதற்குரிய சந்தர்ப்பங் களையும் பெற்றனர்.

வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, நுவரெலியா, அம்பாறை போன்ற இடங்களுக்குச் கல்விச்சுற்றுலா சென்றதும் மாகாணக் கருத்தரங்குகள், தேசிய கருத்தரங்குகளிலும் பங்குபற்றி தமது அறிவையும் ஆற்றலையும் வளர்க்கும் சந்தர்ப்பஙகளைப் பெற்றனர். இதன் வெளிப்பாடு சமூக நலனிலிருந்து பொருளாதார நலனுக்கு மாறுவதற்கான எண்ணக்கரு தோன்றியது. முன்பள்ளி களின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்பைச் செய்து பல சவால்களை சந்தித்த இப் பெண்கள் பொருளாதார ரீதியிலாக வளர்ச்சி குன்றியதை உணர்ந்தனர்.

சமூக நலனில் வளர்ச்சி பெறுவதற்கு இணைப்புக்கள், தொடர்புகளுடன் பலம் வாய்ந்த கட்டமைப்பினையுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிச் சமூகம் பொருளாதார நலனிலும் மேம்பட வேண்டும் என்ற நோக்கில் உருவானது **சங்கமம்** கைத்தொழில் பேட்டையாகும். பொருளாதார அபிவிருத்தியை எமது உள்ளூர் வளங்களைக் கொண்டு விருத்தி செய்வதற்கும் தொழில் உருவாக்கத்திற்கும் பயன்படுத்தும் மாதிரி செயற்திட்டமாக அமைந்துள்ளது. முன்பள்ளிகளின் வளர்ச்சியின் பங்களிப்புச் செய்த பெண்கள் முன்பள்ளிக்கல்வியின் வளர்ச்சியிலும் பங்களிப்புச் செய்து உள்ளூர் விளைபொருளில் உற்பத்தி செய்த உணவின் நுகர்வு இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையை அமைப்பதற்கான எண்ணக்கரு உருவாக்குவதற்கு ஏற்ற சூழலை சிறுவர்களுக்கு ஏற்படுத்துவதற்கான சமூக தயாராக்கல் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் பலாபலன் முன்பள்ளிகள் பொருளாதார நலன் அடைவதற்கும் இப் பெண்கள் சுயசார்பு நிலை அடைவதற்கும் வழிகோலும் எதிர்கால சந்ததியினரான முன்பள்ளிச் சிறுவர்களில் உருவாகும் எண்ணக்கரு எமது சூழலை நாம் உருவாக்குவோம். நாம் பேணுவோம் நாம் பயன்படுத்துவோம். என்ற மனப்பாங்கு செயற்திறனுடன் சிறந்த முகாமைத்துவப் பண்புகளை வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

முன்பள்ளிச் செயற்பாடுகள், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பூரணப்படுத்துவதற்கு மிக அவசிய தேவையாக உள்ளது. முன்பள்ளிகளின் சக்தி வாய்ந்த நுழைவாயிலாக சமூகத்தினுள் நெருங்கிய தொடர்புகளை பல வருடங்களாக ஆரம்பித்து ஒழுங்குபடுத்திய தாய்மார்களுடன் இணைந்து பெரும்பாலான குடும்பங்களுடன் ஏற்படுத்தியுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் அந்தந்த பிரதேசங்களில் உள்ள முன்பள்ளிகளின் பங்கையும் பொறுப்பையும் முன்னேற்றுவதற்கு ஆரம்பித்த முன்பள்ளி ஆசிரியர் சங்கங்களுக்கு கையாளுவதற்கும் பயிற்சிகளுக்கும் பொறுப்பாக உள்ளனர்.

கல்வித்திணைக்களத்தினால் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளை மேற்பார்வைக்கும் கண்காணிப்பிற்கும் உதவிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்பள்ளிச் செயற்பாடுகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டு பல சமூக மட்ட நிறுவனங்கள் ஈடுபாடு காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள்) சிறுவர் பாடசாலை ஆசிரியர்களாக ஆரம்பத்தில் தொழிற்பட்டவர்கள் இப்பாரிய செயற் திட்டத்தினை மேற்கொண்ட பொழுது சமூக செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தும் உள்ளூர், தேசிய, சர்வதேச நிறுவனங்களிலும் தொழில் வாய்ப்பினைப் பெறும் சந்தர்ப்பங்கள் கிடைத்ததன் பயனாக தற்பொழுது முன்பள்ளிகளினூடாகவும் சமூக செயற்பாடுகளை இலகுவாகவும் நல்லுறவுடனும் செய்வதற்கு அவர்களின் உதவிகள் ஒத்தாசைகள் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

முன்பள்ளி கல்வியின் கற்பிக்கும் கலை (Science & Teaching) யின் சூழலின் முன்னேற்றம் இச் செயற்பாட்டிற்கு ஆதரவு கொடுக்கக் கூடிய அளவு பயிற்சிகள் சகல மட்டங்களிலும் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் கூடிய அறிவுடனான புதிய அணுகுமுறையுடன் அறிமுகப் பட்டறைகள், சமூக தயாராக்கல் தந்திரோபாயங்கள் சமூக பங்குபற்றுதல் மூலம் மக்களை (Empowerment) வலுவூட்டி முன்பள்ளிச் செயற்பாடுகளின் பங்கும் பொறுப்பும் பகிரக்கூடிய வகையில் தொடர்புபடுத்தி அபிவிருத் திக்குக் கொண்டு செல்லும் பொழுது தாக்குப் பிடிக்கக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோர் உருவாக்கிய ஒரு அழியாச் சொத்து

எமது பகுதியிலுள்ள பல கிராமத்திலிருந்து வரும் சிறுவர்களின் வாழ்க்கையை வளம்பெறச் செய்யும் மத்திய கல்லூரியாக விளங்கும் விக்ரோறியாக் கல்லூரி பற்றிக் கருத்து வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 1997ஆம் ஆண்டு யாழ். மாவட்ட புனர்நிர்மணா வேலைகளைச் செய்வதற்கு முதல் முதலாக முன்வந்த ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தில் (GTZ) பணிபுரியச் சந்தர்ப்பம் கிடைத்தமை GTZ இன் புனர்நிர்மாணாத் திட்டத்தில் ஒன்றாகிய விக்ரோறியாக் கல்லூரியை எனக்கு ஒப்பிட்டு அளவிடக் கூடியதாக இருந்தது.

ஆரம்பகாலத்தில் யாழ்.மாவட்டத்தில் பாடசாலை புனர்நிர்மாண வேலைகளைத் தொடங்கிய பொழுது GTZ தனது கொள்கைக்கு அமைவாக இத்திட்டத்தில் பாடசாலைச் சமூகத்தையும் தனது பங்காளியாக இணைத்துப் பங்கேற்கவைக்க முனைந்த பொழுது கூடிய பிரயத்தனம் எடுக்க வேண்டியிருந்தது. நடந்த போரின் விளைவு, தொடர்ந்து கொண்டிருக்கும் போரின் தடைகள், பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இடப்பெயர்வினால் உடமைகள் இழந்து, உறைவிடங்கள் அழிக்கப்பட்டு, உறவுகளைப் பிரிந்து திரும்பவும் தமது இடங்களிற்கு வந்த சமயத்தில் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்ய முடியாத நிலையிலுள்ள மனம் உடைந்த மக்களுக்குத் தாம் 'அரசாங்கப் பாடசாலைக் கட்டிடங்கள்' புனர்நிர்மாணம் செய்வதற்கு ஏன் உதவ வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. இவர்களை அணுகி GTZ திட்டத்திற்கு அமைவாக பங்காளர்களாக்குவதற்கு ஆற்றுப்படுத்தல் செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. சில பாடசாலை களிற் பல தடவைகள் திரும்பத் திரும்ப சந்தித்துக் கலந்துரையாடல் மூலம் நீண்டகால அபிவிருத்திக் கண்ணோட்டத்தினை வலியுறுத்தி நம்பிக்கை ஏற்படுத்த வேண்டி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈடுபாடுடைய பாடசாலைச் சமூகம் :**

எமது விக்ரோறியாக் கல்லூரியில் நடந்த முதலாவது பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்திலேயே புனர்நிர்மாணத் திட்டத்தில் பங்கேற்பதில் உச்சப்படியில் பாடசாலைச் சமூகம் இருந்ததை அவதானிக்க முடிந்தது. GTZ இன் கொள்கைத் திட்டமிடலுக்கு அமைவாகப் பாடசாலைச் சமூகம் பல இடங்களி லிருந்து வரும் மாணவர்களின் பெற்றோர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் என சகலரும் தத்தமது பங்களிப்பைச் செய்தமை ஏனைய பாடசாலைகளிலும் இதேபோல செய்ய முடியும் என்ற நம்பிக்கையை விக்ரோறியாக் கல்லூரி எனக்குக் கொடுத்தது.

**முன்னோடி மாணவர்கள்**

யாழ். மாவட்டப் பாடசாலைப் புனர்நிர்மாணத் திட்டம் மூலம் மாணவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஏற்படப் போகும் விளைவுகளை ஆய்வு செய்வதற்கு ஜேர்மனியிலிருந்து வந்த பிரதிநிதியைச் சந்திப்பதற்கு விக்ரோறியாக் கல்லூரி மேல் வகுப்பு மாணவர்கள் சிலருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இம்மாணவர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது பலம், பலவீனம், வளங்கள், தேவைகள் பற்றிய நிலைப்பாட்டினைத் தயக்கமின்றி சுதந்திரமாக வெளியிட்டமை அவர்கள் தலைமைத்துவத்தை எடுத்துக்காட்டியது.

**ஆர்வமுள்ள அதிபர்கள்**

விக்ரோறியாக் கல்லூரியிற் கடமை புரிந்த, புரியும் அதிபர்கள் பாடசாலை முன்னேற்றம், மாணவர்களின் தலைமைத்துவம், சமூக அபிவிருத்தியில் காட்டும் அக்கறை தான் பலவருடங்களாகத் தொடர்ந்தும் இப் பாடசாலையை நல்ல முறையில் இயங்கவைப்பதற்குக் காரணம் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. பாடசாலை அதிபர்கள் திறன்வாய்ந்த வர்களாகவும், அர்ப்பணிப்புள்ளவர்களாகவும், தலைமைத்துவத்து டன் இயங்குவதற்கு அந்த அழகான, அமைதியான சூழலுக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அழகான கட்டடமும் அமைதியான சூழலும்:

விக்ரோறியாக் கல்லூரியின் பிரமாண்டமான பழமையான கட்டிடத் தொழில்நுட்பத்துடனான அழகான விசாலமான மண்டப அமைப்பு GTZ நிறுவன ஜேர்மனியர்களை ரசிக்க வைத்தது. அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட மாடிக்கட்டிடமும் பழைய கட்டடத்திற்கு இணையாக மறுபுறத்தில் அழகாக அமைந்துள்ளது. இந்தக் காலத்திலேயே சவுக்கு மரங்களை நாட்டி அழகூட்டிய சூழல் மேலும் மரங்களை நாட்டிப் பச்சைப் பசேலெனச் செழிப்புற எடுப்பான தோற்றமும் அமைதியான சூழலும் அப்பாடசாலையைக் கடந்து செல்லும் பொழுது பார்த்து ரசிப்பதுடன் இது ஒரு மிசன் பாடசாலையா? எனப் பலராலும் கேட்கப்படும் பொழுது இல்லை எம்மவர்களால் உருவாக்கி முகாமைத்துவம் செய்து அரசாங்கத்திடம் கொடுத்த பாடசாலை எனச் சொல்லும் பொழுது பூரிப்படைவதுண்டு.

### முறையான பராமரிப்பு

GTZ இன் அவதானிப்பில் பல பாடசாலைக் கட்டிடங்கள் போரினால் அழிந்தது மட்டுமல்ல சரியான பராமரிப்பின்றியும் சேதமடைந்துள்ளன என்பதைப் புரிந்து கொண்டோம். ஆனால் விக்ரோறியாக் கல்லூரிக் கட்டிடங்களை அழகாக அமைத்ததுடன் நின்று விடாது முறையான பராமரிப்புத் தொடர்ந்தும் செய்து வருவது அப்பாடசாலையில் தொடர்ந்து பணியாற்றிவரும் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விகற்கும் மாணவர்களது அக்கறையை எடுத்துக்காட்டுகிறது.

### மாணவர் விருத்திக்கு உதவும் வளங்கள்

மாணவர்களின் விருத்திக்கு ஏற்ற செயற்பாடுகள் பல இப்பாடசாலையில் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு மாணவரின் திறமைக்கு ஏற்ப வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு உறுதுணையாக இருந்தபோதும் இடம்பெயர்வின் போது இந்த வளத்தை இழக்க நேரிட்டது. அழிந்த இந்த வளத்தைக் கட்டி எழுப்புவதற்கும் தளபாட வசதியினை நிறைவு செய்வதற்கும் GTZ இன் உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ரோறியாக் கல்லூரிக்குக் கிடைத்தது. மேலும் இதை முன்னேற்றுவதில் பாடசாலைச் சமூகம் பெரும் முயற்சி எடுக்க வேண்டியுள்ளது. இதில் திறந்த வெளியரங்கு, விளையாட்டு மைதானம் முக்கிய அம்சங்களாகும்.

**வெளிப்படையான கணக்கு**

பாடசாலை அபிவிருத்திச் சபையானது ஒவ்வொரு பழைய மாணவர் சங்கநிதி உதவிகளையும், சர்வதேச நிறுவன உதவி, அரசாங்க உதவி, பெற்றோர், மாணவர் போன்ற பல வழிகளிற் பெறும் உதவிகளையும் வெளிப்படையான கணக்கு வரவு செலவு காட்டுவதினால் சகலரின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**விளையாட்டு மைதானம்**

இம் மைதானம் இப்பாடசாலைச் சமூகத்திற்கு மட்டுமன்றிச் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிலுள்ள சகல பாடசாலைகளின் பொது விளையாட்டு நிகழ்வுகளுக்கும் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இதனால் ஏனையோருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைக்கின்றது. GTZ இன் விளையாட்டுக் குழு பங்காளியாக விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களுடன் கிரிக்கெட் சினேகிதப் போட்டியொன்றுக்கு விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாட வந்த பொழுது மிக உற்சாக வரவேற்று இணைந்து விளையாடி உபசரித்த பண்பு என்னைப் பெருமிதம் கொள்ள வைத்தது.

**பழைய மாணவர் சங்கம் - கனடா கிளை**

2000 ஆம் ஆண்டில் கனடா வந்த பொழுது பழைய மாணவர் சங்க உறுப்பினர்களைச் சந்தித்து போர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாலும் பாடசாலை முன்னேற்றத்தில் பழைய மாணவர்களது பங்கேற்பு தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியத்தையும், போரில் கட்டிடம் அழிந்தாலும் மாணவர்களது தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் விருத்திக்கும் நாம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகள் வீண் போகாது என்பதை எடுத்துக்கூறி உற்சாகம் ஊட்டுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

2001 ஆம் ஆண்டில் கனடா வந்த பொழுது தாமாக உற்சாகத்துடன் பாடசாலைக்கு உதவுவதற்கு முன்வந்த கனடாப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். தொடர்ந்தும் பழைய மாணவர் சங்கம் தனது சேவையை முழுமனதுடன் செய்து பாடசாலைக்கு அத்தியாவசியத் தேவையான விளையாட்டு மைதானத்தின் விஸ்தரிப்பிற்கான நிலத்தை வாங்குவதற்கும் திறந்த வெளியரங்கினைத் திருத்தி அமைப்பதற்கும் ஆர்வத்துடன் காத்திருக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் ஆதரவு கொடுக்கவேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன். GTZஇல் திறம்பட என் பணியைச் செய்வதற்குரிய எனது ஆற்றலை வளர்க்க உதவிய எமது பாடசாலையாகிய விக்ரோறியாக் கல்லூரியை வாழ்த்தி வணங்குகின்றேன்.

பற்றுஅற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. - தமிழ்மறை -

**திருமதி இ.பொன்மலர்**
சமூக ஆற்றுப்படுத்துநர், GTZ JRP.
மூளாய், சுழிபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு ஓர் எடுத்துக்காட்டு

சிறுவர் கல்வி ஒரு முதலீடு. உரிய நேரத்தில் உரிய சந்தர்ப்பம் வழங்குவது இம் முதலீட்டின் முழுமையான பயனைப் பெறுவதற்கு வழியாகும்.

எமது விக்ரோறியாக் கல்லூரியின் உதயம் எமது பிரதேசத்தில் தகுந்த பலனைப் பெறுவதற்கு எமது முழு சமூகத்திற்கும் உதவியதென்பதில் எதவித சந்தேகமும் இல்லை எனலாம்.

குறிப்பாக ஒரு குழுவாக ஒரே சமூகமாக மனிததேவையின் உச்சக்கட்டமான பூரண திருப்தியுடன் வாழ்ந்த எமது மூதாதையர் பிறநாட்டவரின் ஆதிக்கம் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய காலத்தில் எமது கலாசாரம், சமயம், மொழியைப் பேரம் பேசும் சமயத்தில் இக்கல்லூரி தோன்றியது.

எவருக்கும் நாம் சளைத்தவர்கள் அல்ல என்று காட்டுவது போல, சகல துறைகளிலும் முன்னோடியாகவும் சகல வளங்களுடனும் அமைக்கப்பட்டது. நேசக்கரங்கள் நீட்டி ஆதரித்து எமது கலாசாரம், மொழி சமயத்தை பேணிப்பாதுகாக் கக்கூடியதுடன் மட்டும் நின்றுவிடாது ஆங்கிலமொழியையும் ஆங்கிலேயருடனான நல்லுறவுடன் சிறந்த ஆங்கிலேய ஆசிரியர்களையும் உள்ளடக்கி சகலருக்கும் உதவி புரிந்தது விக்ரோறியாக் கல்லூரி.

பலர் முறைசார்ந்த கல்வியைக் கற்று மேலான பதவிகளை இலங்கையில் மட்டுமன்றி மலேசியா போன்ற நாடுகளிலும் (அந்தக் காலத்தில்) வேலை செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக இங்குள்ள குடும்பங்கள் மலேசியன் பென்சனையும் அநுபவிக்க முடிந்தது. ஆனால் இப்போது உள்ள யதார்த்த நிலைமையை நாம் உணரவேண்டும். சிந்தித்துச் செயற்பட வேண்டும். நீண்டகாலப் போர்ச்சூழல் பல வழி களில் எம்மக்களின் வாழ்க்கைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தியதை மறக்கமுடியாது. படித்த பரம்பரையில் உள்ள பலர் நாட்டை விட்டு வெளியேறு வதற்கும் இவர்களில் ஏற்கனவே சென்றிருந்தவர்களின் தொடர்புகள் உதவியது.

வெளியில் செல்லாத இவர்கள் இனத்தவர்களுக்கு வெளியில் வரும் உதவிகள் நகரிலுள்ள முன்னோடிப் பாடசாலைகளை நோக்கி நகரவைத்தன.

தற்போது மிகக் குறைந்த வீதத்தினர் தான் ஊரிலேயே வசிப்பதும் - விக்ரோறியாக் கல்லூரிக்கு படிப்பதற்குப் பிள்ளை களை அனுப்புகின்றனர். தற்பொழுது விக்ரோறியாவில் படிக்கும் மாணவர்களில் பெரும்பான்மையினர் மிக வறிய அயற்கிராமங் களில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களிற் பலர் குடும்பச் சுமை காரணமாக இளவயதில் உழைத்துப் பெண்தலைமைத்துவக் குடும்பப் பொறுப்பினை ஏற்பதிற் பங்களிக்கின்றனர்.

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் இவ் வறிய கிராமங்களில் ஆய்வினை மேற்கொண்ட பொழுது இடைவிலகல் மாணவர்களின் இந்த நிலவரத்தை அறிந்தோம்.

விக்ரோறியாக் கல்லூரி அதிபருடன் இவ்விடயம் பற்றிக் கலந்தாலோசித்த பொழுது பாடசாலையில் மெல்லக்கற்போர் பலர் இனம் காணப்பட்டுள்ளனர் என்றும் இவர்களும் கூடிய விரைவில் இடைவிலகல் நிலைக்குத் தள்ளப்பட்டு மேலும் இக் கிராமங்களிற் பிரச்சினைகள் அதிகரிக்கும் என அறிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் ஆசிரியர்களுடன் இணைந்து சில நடவடிக்கைகள் எடுத்தோம். கட்டாயக்கல்வி வாரம் - அம்மாணவர்களே சுலோக அட்டைகளுடன் பாதயாத்திரை கிராமத்திலிருந்து பாடசாலை வரை - பெற்றோருடன் மேற்கொண்டனர். ஏனைய சமூகத்திற்கும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த முடிந்தது. கல்லூரியில் பின்னேர வகுப்புக்கள் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு ஆரம்பிக்கப்பட்டது.

ஆழமாக ஆய்வினை மேற்கொண்ட பொழுது பின்வரும் பிரச்சினைகள் இனம் காணப்பட்டன.

* இம் மாணவர்களைக் கையாளுவதற்கு, விசேட பயிற்சி ஆசிரியர்களுக்கு தேவைப்பட்டது.
* இம் மாணவர்களின் பெற்றோர் பாடசாலைக்கு வருவதில்லை. எந்த நிகழ்விலும் பங்குபற்றுவதும் இல்லை. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் அங்கம் வகிப்ப தில்லை.
* இப்பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லாமல் இருப்பதும் பின்னடைவிற்குக் காரணம்.
* இந்தக் கிராமங்களிற் போசாக்கின்மை நோய்களின் தாக்கங்கள் அதிகமாக உள்ளது.
* போரினால் ஏற்பட்ட மனவடுக்கள், இம் மாணவர் களுக்குக் கல்வியில் ஆர்வம் காட்ட முடியாமல் உள்ளது.
* வறிய குடும்பத்திலிருந்து வரும் பிள்ளைகள் காலை உணவு உண்ணாமல் பாடசாலை வருகின்றனர்.
* பின்னரே வகுப்பில் முழுக்கவனமும் செலுத்த முடிவ தில்லை.

இவ்விடயம் சங்கானை உதவிக் கல்விப்பணிப்பாளர், சுகாதாரத் திணைக்கள வைத்திய அதிகாரி (MOH) மானிப்பாய், மனோவியல் வைத்திய அதிகாரி, மருத்துவ பீடம், பல்கலைக்கழகம் ஆகிய மட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் அனுசரணையுடன் படித்துவிட்டு இருக்கும் இளைஞர்களை ஒன்றிணைத்து விசேட பயிற்சி கொடுக்கப்பட்டு 10 பாடசாலைகளில் மாலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இவ் வகுப்பிற் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு சிறு ஊக்குவிப்புக் கொடுப்பதற்கு எவரும் முன்வராதது பெரும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும். நாம் இத்திட்டம் தொடங்கிய வேறு பாடசாலைகளில் இம் மாணவர்களுக்குச் சிற்றுண்டி கொடுத்துப் பசியைப் போக்கச் சிலர் முன்வந்தனர்.

ஆனால் விக்ரோறியாக் கல்லூரியில் இந்தநிலை இன்னும் வரவில்லை. இதைவிட இன்னொரு விடயத்தைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.இப் பாடசாலையிற் படித்துவிட்டு வெளியேறும் மாணவர்கள் தொகை வருடா வருடம் அதிகரித்து வருகின்றது.

இவர்களுக்கான தொழில் ஊக்கப் பயிற்சிகள், முகாமைத்துவப் பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் ஏதாவது ஒரு துறையில் தொழில் தொடங்கி சுயசார்பு நிலையை இச் சூழலிலுள்ள இம்மக்கள் அடைவதற்கு வழிவகுக்க முடியும். இப்படியான பயிற்சிகளுக்கு உதவ இப்பாடசாலையிற் படித்து முன்னேறியவர்கள் முன்வர வேண்டும். பல வழிகளில் பாடசாலை வளங்களை முன்னேற்ற முயலும் அன்பர்கள் இப் பாடசாலையின் தற்கால மனித வளங்களை முன்னேற்றுவதைக் கருத்தில் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

இப் பாடசாலை யாழ். நகரிலுள்ள முன்னோடிப் பாடசாலைகளின் கட்டிட, தளபாட வசதிகளுடன் மேலான விளையாட்டு மைதான இடவசதிகளையும் உள்ளடக்கியுள்ளது. இவ் வளங்கள் முழுமையாகப் பயன்படுவதற்கு இங்கு வரும் கஷ்டப்பட்ட மக்கள் வாழும் அயல்கிராமங்களிலுள்ள பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. இந்த முன்னேற்றம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான சமூகத்தை நல்லநிலைக்கு உயர்த்தி இப் பிரதேசம் அபிவிருத்தி அடைவதற்கு உதவியாக இருக்கும். நாம் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு உரிய வழிகாட்டலைத் தந்துதவிய எமது விக்ரோறியாக் கல்லூரி தொடர்ந்தும் சிறப்பாக எம்மிடத்தில் வசிக்கும் பிள்ளைகளைப் பல்லாண்டுகாலம் நிலைத்து நிமிர்ந்து நிற்க இறைவனை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திருமதி பொன்மலர்**
பழைய மாணவி,
இயக்குனர்
சிறுவர் கல்விக்கும்
பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்
மூளாய், சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி – 07

1.சமுக குடும்ப வாழ்க்கை ஒளியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவனுடன் இல்லற வாழ்க்கையில் இணைந்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தையாருக்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் தலைமையில் சமாதான நீதவானாகப் பட்டம் பெற்றமையைப் பாராட்டும் விழா ஆரம்பமாகுமுன் குடும்பத்தினர் உறவினர் சகிதம் இணைந்திருந்த காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது அருமை மைத்துனி திருமண பந்தத்தில் இணைந்த பின். குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்திருந்த காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றோரை இழந்த தனது பெறாமகன் உசயசங்கருக்கு மருமகள் சங்கீதாவைத் திருமணப் பந்தத்தில் கணவனுடன் சேர்ந்து
பெற்றோருக்குரிய சமய சடங்குகளைச் சரிவர நிறைவேற்றி முடித்த பின் குடும்ப உறுப்பினர்களுடன் உணர்வுபூர்வமாக இணைந்திருந்த காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2008.06.05 மாட்சிமை தங்கிய பிரதம நீதியரசர் சரத். என். சில்வா அவர்கள் முன்னால் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதியாகத் தனது தம்பி விக்னராசா சத்தியப் பிரமாணம் செய்த பின் சமூகமளித்த குடும்பத்தவர்களுடன் இணைந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திய காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாஞ்சையுடன் தனது மகனாக வளர்த்து சட்டமானிப் பட்டம் பெற்ற மருமகன் சஞ்சுவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி – 08

1. மின்அஞ்சல் மூல அனுதாபச் செய்தி
2. துண்டுப் பிரசுர அஞ்சலி
நன்றி நவிலல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**From Sydney:**

Our deepest condolences. Regards,
Anita & family.

Deepest sympathies Cinna mama.
Chenthuran & Janani.

Sorry for your loss,
our condolences Tharshini.

**From Oman:**

Dear Anna,

I was shocked to learn of Acca Ponmalar sudden death.
It is certainly great loss. Please accept my sincere and heart-felt condolences.

Yours sincerely,
Gesavan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி உன்னத சமூகசேவகி

மூளாயூர்

# அமரர்.திருமதி.பொன்மலர் இராஜேஸ்வரன் அவர்கட்கு

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்



உலகிற்கு தாய்த்தோற்றம்
03.05.1943

இறையிற்காய் மறைவு
16.08.2015

மாதற்குப் பெருமைதர மாநிலத்தில் வந்துதித்து
ஆதரவு அற்றோர்க்கு ஆதரவு பலஅளித்து
மூதறிஞராய்த் திகழ்ந்த பொன்மலராம் அன்னையிவர்
பாதகனார் கைப்பட்டோ பரமனடி சென்றடைந்தார்

சங்கங்கள் பலஅமைத்து சரித்திரங்கள் பலபடைத்து
பொங்குதமிழ் மாந்தற்காய் புதுப்புது வழிசமைத்து
சிங்கார வாழ்வளித்த பொன்மலராம் அன்னையிவர்
தங்கஉடல் தனைவிட்டோ தலைவனடி சென்றடைந்தார்

பாலர்க்குப் பாடசாலை ஒன்றதொரு படிஅமைத்து
ஞாலத்தோர் உயர்வுக்காய் ஞானத்தால் வழிவகுத்து
கோலத்தால் உயர்ந்திருந்த பொன்மலராம் அன்னையிவர்
காலனவன் கைப்பட்டோ கடவுளடி சென்றடைந்தார்

முத்துக் குமரனுக்கு முறையாகப் பணிசெய்து
தித்திக்கும் திருவிழாக்கள் தினம்நடக்க வழிவகுத்து
வித்தகியாய்த் திகழ்ந்திருந்த பொன்மலராம் அன்னையிவர்
அத்தனவன் அழைப்பேற்றோ அவனடியைச் சென்றடைந்தார்

சைவத் தமிழ்வளர வையத்தில் வாழ்வெடுத்து
கைவண்ணம் பலகாட்டி சமூகப் பணி பல செய்து
தெய்வமாதாய் திகழ்ந்திருந்த பொன்மலராம் அன்னையிவர்
மெய்ஞான நிலையடைந்தோ இறைவனடி சென்றடைந்தார்

அர்ப்பணிப்பினோடு பல அரும்பணிகள் தான்முடித்து
நற்பணிக்காய்த் தன்னையே நாளெல்லாம் அர்ப்பணித்து
பொற்பதம் பதித்த அன்னை பொன்மலராம அன்னையிவர்
பற்றறுத்துப் பணிமுடித்தோ பரம்பொருளைச் சென்றடைந்தார்.

அன்னையவர் பொன்மலரின் பிரிவுத் துயர்சுமந்து
துன்பியலில் துவழ்கின்ற உறவுகளோடு நாமிணைந்து
இன்னுயிரார் துன்பதை இயன்றவரை நாம்பகிர்ந்து
பொன்னன்னை இறையடியில் சாந்தியுற வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*சித்திவிநாயகர் வர்த்தகநிலையம்,*
*பிள்ளையார் கோவிலடி,*
*மூளாய், சுழிபுரம்.*
*ஸ்ரீ லங்கா - 16.08.2015*

**அன்னையின் பிரிவிற்காய்**
**கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கும்**
**க.பாலச்சந்திரன்**

பகவான் பிறிண்டேர்ஸ், சித்தன்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 03 05 1943

விண்ணில் 16 08 2015



[illegible]

திருமதி

# இராஜேஸ்வரன் பொன்மலர்

[illegible]

16.08.2015

[illegible]

INS-GD

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



மலர்வு
03
⁂
05
⁂
1943

உதிர்வு
16
⁂
08
⁂
2015

# அமரர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்

(முகாமையாளர், மூளாய் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்)

சாந்தமும் சீலமும் தனிப்பெரும் வாய்மையும் நிறைந்த எல்லோராலும் **"பொன்மலர்அக்கா"** என்று அன்புடன் அழைக்கப்பட்ட திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் அவர்களின் மறைவு எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் தந்தைவழிவந்த மூளாய் ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தை சிறப்புடன் நிர்வகித்துவந்ததுடன் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான வேலைத் திட்டங்களில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த மாதர் சங்கத் தலைவியாக கடமை வகித்து இக்கிராம மக்களை மாத்திரமல்லாமல் யாழ் குடாநாட்டில் **பெண்கள் தங்கி வாழும் நிலையில் இருந்து விடுபட வேண்டும்** என்றும் அயராது உழைத்தவர்.

அன்னாரின் பிரிவு இக்கிராமத்திற்கு மாத்திரமல்லாமல் அனைத்துப் பெண்ணினத்திற்கே ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்

**பரிபாலன சபை**
**மூளாய் வதிரன்புலோ**
**சித்திவிநாயகர் தேவஸ்தானம்**

மூளாய்,
சுழிபுரம்.
16-08-2015

திருமொழி அச்சகம், சங்கானை. 0213215867, 0212251066



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
03
05
1943



உதிர்வு
16
08
2015

*எமது மன்றத்தின் நலன் விரும்பி*

## அமரர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்

(இயக்குனர் INSGD மூளாய்)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
பாரினில் வாழ்ந்த செம்மல்
அன்பின் மிளிர்வால் ஆலயக் கருமங்கள்
ஆற்றிட உதவிய பெருந்தகை
என்பும் உருக இசைவாக எமக்கு
என்றும் மலர்ந்த மங்கை
இன்பும் தந்து இசை பாடிய குயில்
இன்றோ மறைந்தார் ஏக்கமே.

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருறும்
மூளாய் இந்து இளைஞர் மன்றம்,
முன்பள்ளிச் சமூகம்

மூளாய்
16-08-2015

திருமொழி அச்சகம், சங்கானை. 0213215867, 0212251066



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
03.05.1943

விண்ணில்
16.08.2015

அமரர் திருமதி.

## பொன்மலர் இராஜேஸ்வரன்

(ஏழுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவன இயக்குனர், மூளாய்)

முன்பள்ளி அசிரியர் பயிற்சிதனை
முறையாகப் பயிற்றுவித்த ஆசானும்
முன்பள்ளி ஆசிரியர் சங்கங்களை
ஒருங்கிணைத்த பெருமைக்குரியவரும்
அனுபவமிக்க அறிவுதனை ஆசிரியருக்கு அளித்து
ஆடல்பாடலுடன் கல்வியை அழகாக வழங்கியவரும்
ஆண்பெண் சமத்துவத்தைப் பேணி
சம உரிமைக்காய் குரல் கொடுத்தவரும்
அகிலமெல்லாம் அரம்பக் கல்வியை பெறுவதற்கு
அரிச்சுவடியை ஆரம்பித்து வைத்தவருமாகிய
அமரர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்
அவர்கள் இறைபதமடைந்தமையை அறிந்து துயரடைந்து
அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவால் துயருறும்
ஆசிரியர்கள், இணைப்பாளர், வலிமேற்கு முன்பள்ளி அசிரியர் சங்கம்
சங்கானைக்கோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் எமது நன்றிகள்
## உங்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்

எமது அன்பிற்கும் மதிப்பிற்கு முரிய குடும்பத் தலைவர் அமரர் **பொன்மலர் இராசேஸ்வரன்** அவர்கள் இவ்வுலகியலில் வாழ்ந்த போது அவரை அன்போடு நேசித்துப் பழகியோருக்கும், அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடனடியாக வந்து உரிய உதவிகள் செய்தவர்களுக்கும், அவரின் இறுதிக் கிரியைகளில் பெருந்திரளாகக் கலந்து கொண்டவர்கட்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், மலர் வளையங்கள் சாத்தி யோருக்கும், தொடர்புச் சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்துத் துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளின்போது மயானம் வரை வந்து ஆறுதல் அளித்தோருக்கும் மற்றும் இன்றைய அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குகொண்டு அமரர் அவர்களுடைய ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தோருக்கும், மற்றும் எல்லா வழிகளிலும் எல்லா உதவிகளும் புரிந்து எமக்கு அமைதியைத் தந்தவர்களுக்கும் நாம் எமது காலத்தால் அழியாத நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் குடும்பவர், உறவினர் மற்றும் நண்பர்களின் உள்ளக்கிடக்கைகளைச் சுமந்து வரும் இந்நினைவுமலரைச் சிறப்பாகத் தொகுத்து அச்சிட்டுத் தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (இறைவனுடைய ஆன்மா ஒன்றின் விமோசனத்திற்காக, நீங்கள் ஆற்றிய பேருதவிக்காக இறைவன் உங்களுக்குப் பேரருள் புரிய வேண்டுமென வேண்டி நிற்கின்றோம்.)



மூளாய், சுழிபுரம்.

**சகோதர சகோதரிகள் குடும்பமும்,**
**மருமக்கள், பெறாமக்கள்,**
**பேரப்பிள்ளைகளும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரியமானவர்களுக்கு வழங்கும் செய்தி**
**Message to those who love and respect me.**

ஏழைகளுக்கான சேவையில் மிகுந்த நம்பிக்கையும் பூரண திருப்தியும் அடைகின்றேன். ஏனெனில் ஏழைகளின் புன்னகையில் இறைவன் உறைகின்றான்.

I have the greatest trust and content with the service to the poor since the God dwells in the smile of the poor.


வேறெதனைக் காட்டிலும் நேர்மைக்கு அதி முக்கியத்துவம் கொடுப்பதால் என் முயற்சிகளில் பணவருவாயைப் புறம் தள்ளுகிறேன்.

I disregard monetary gain in my pursuits because I value the policy of honesty much more than anything else.

அவன் அருளால் தான் அவன்தாள் வணங்க முடியும் என மாணிக்கவாசகர் அருள்வாக்குச் செய்தார்.

Saint Manikkavasakar said "O God Almighty! The grace is essential to worship Thy sacred feet"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org